பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 01 வெள்ளிக்கிழமை 18.10.2024 கதிர் 345

## ரில்வின் அப்படிக் கூறியிருக்கமாட்டார் ஒரே வருடத்திற்குள் புதிய அரசமைப்பு

### ஜே.வி.பி. முக்கியதஸ்தர் பிமல் ரத்நாயக்க வவுனியாவில் தெரிவிப்பு

தமிழ் மக்கள் அடிப்படைத் தேவைகளையே எதிர்பார்க்கிறார்கள் தமிழ் அரசியல்வாதிகள்தான் அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசுகிறார்கள் என்று ஜேவிபியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கூறியிருக்கமாட்டார் என்று அந்தக் கட்சியின் உயர் பீட உறுப்பினர் பிமல் ரத்நாயக்கா தெரிவித்தார்.

தமிழ், முஸ்லிம் மக்களுக்குத் தீர்வு வழங்கும் வகையில் இன்னும் ஒரு வருடத்திற்குள் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து அவர் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் இந்தப் பகுதியில் எமக்கான ஆதரவாளர்கள் அதிகரித்துள்ளனர். நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் பலர் எம்முடன் இணைந்து போட்டியிட வந்தனர். மஸ்தான் வன்னியில் போட்டியிடக் கேட்டார். தாம் எவ்வளவு பணத்தைவேண்டுமானாலும் செலவு செய்வார் என்று சொன்னார். அதுபோல் அங்கஜன் இராமநாதன் கோட்டார். நாங்கள் மறுத்து விட்டோம். எமது கட்சிக்குக் கொள்கை உண்டு. அதன்படிபயணிப்போம். நாடாளுமன்றத் தேர்தலில் விருப்பு வாக்குமுறை இல்லை எனச் சிலர் போலிப் பரப்புரை செய்கிறார்கள். ஜே.ஆர்.ஜெவர்த்தனா கொண்டு வந்த திட்டம் அது. விகிதாசார தேர்தல் முறையில் அது உள்ளது. அந்த முறையின் கீழ் நாம் போட்டியிடும்போது அதனை ஏற்கிறோம். அந்த அடிப்படையிலேயே உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

தமிழ் மக்களின் அதிகாரப் பகிர்வு தொடர்பாக ரில்வின் சில்வா தெரிவிக்த கருத்துத் தொடர்பாக நான் ☞ 8

## வேட்பாளர்கள் விவரங்கள் விரைவில் சமூக வலைத் தளங்களில் வெளியீடு

### தனித் திட்டம் உருவாக்குகிறது பவ்ரல்

பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் தகவல்களை உரிய முறையில் அறிந்துகொள்வதற்காக பவ்ரல் அமைப்பு தனித் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது.

இன்னும் சில தினங்களுக்குள் சமூக வலைத் தளங்களின் ஊடாக அதனை வாக்காளர்களுக்காக வெளியிடவுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

'உங்கள் எதிர்கால நாடாளுமன்ற உறுப்பினரை அறிந்துகொள்ளுங்கள்' என்ற தொனிப்பொருளில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

நாட்டின் அனைத்து தேர்தல் வேட்பாளர்களின் ☞ 8

## பாதுகாப்பு செயலருடன் அமெ. தூதுவர் சந்திப்பு

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தவை அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் பாதுகாப்பு அமைச்சில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பிராந்திய பாதுகாப்பு, பாதுகாப்பு ஒத்துழைப்பு ☞ 8

## இது ரகசியம் அல்ல!

தமிழ்அரசுக்கட்சியாழ்ப்பாணத்தில் தனது வேட்பாளர் அறிமுகத்தை வெகு கோலாகலமாக நடத்தியது. அந்தக் கூட்டத்திற்கு மண்டபம் நிறைந்தளவுக்கு ஆட்களையும் திரட்டிக் காட்டி தனது அழகும் மவுசும் குறையவில்லை என்றும் நிரூபித்தது. மற்றைய கட்சிகளும் தத்தமது வசதிக்கும் பலத்திற்கும் ஏற்ப வேட்பாளர்அறிமுகங்களைச்செய்தன. சுயேச்சையாகப் போட்டியிடும் சாவகச்சேரி வைத்தியசாலைச் சர்ச்சைப் புகழ் மருத்துவர் அருச்சுனாகூட தனியார் விடுதி ஒன்றில் வேட்பாளர் அறிமுகத்தை நிகழ்த்தியிருந்தார். ஆனால், நாங்கள்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நாங்கள் 5 கட்சிகள் ஒற்றுமையாக இந்தத் தேர்தலை எதிர்கொள்கின்றோம், ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஊதிய சங்கு சின்னத்தைநாங்கள்பெற்றுவிட்டோம் என்றெல்லாம்மார்தட்டித்திரியும் ☞ 2

## பொலிஸாரின் எச்சரிக்கை

வீடுகளை வாடகைக்கு விடும்போது மிகவும் கவனமாக இருக்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டவர்களுக்கு வீடு வழங்குவதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிநாட்டினரின் செயற்பாடுகளைக் கண்டறிந்து ☞ 2

# படையினரின் ஆக்கிரமிப்பிலிருந்து வலி.வடக்கு காணிகளை விடுவித்துத் தருவோம்

### தேசிய மக்கள் சக்தி யாழ். அமைப்பாளர் உறுதிமொழி

வலி. வடக்கு பகுதிகளில் இலங்கைப் படையினர் ஆக்கிரமித்து வைத்துள்ள மக்களின்காணிகளில்பெரும்பாலானவற்றை விடுவித்துத் தருவோம் என்று உறுதிமொழி வழங்கினார் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரம். இந்தக் காணிகள் தொடர்பாகர் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க ஏற்கனவே கவனம் செலுத்தியுள்ளார்என்றும்அவர்தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தின் வடக்கே உள்ள வலி. வடக்கு பகுதியில் பலாலி விமானப் படைத் தளம் மற்றும் காங்கேசன் துறைமுகம் ஆகியவற்றைச்சூழவுள்ளமக்கள்காணிகள் போர்க் காலத்தில் அரச படையினரால் ☞ 2

## 3045 முறைப்பாடுகள்

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்குபொதுமக்களிடமிருந்து இதுவரை 3,045 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த வருடத்தின் செப்டம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் குறித்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இவற்றுள் 811 முறைப்பாடுகளை விசாரணை செய்யுமாறு இலஞ்சம் மற்றும்ஊழல்விசாரணைஆணைக்குழு உத்தரவிட்டுள்ளதுடன்சுற்றிவளைப்பில்67 சந்தேகநபர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறுகைதுசெய்யப்பட்டவர்களுள் 20பொலிஸாரும்அடங்குகின்றனர். ☞ 8

## வஸ்கடுவ கடலில் மூழ்கி நுவர இளைஞர் மாயம்

களுத்துறை வடக்கு வஸ்கடுவ பிரதேசத்தில் கடலில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நேற்று மதியம் கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல்போனவர் ☞ 2



## கொள்கை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புப்பற்றி அலி சப்ரி எச்சரிக்கை

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸை தனியார்மயப்படுத்தப் போவதில்லை என்றுஅநுரகுமாரதிசநாயக்கவின்ஆட்சி எடுத்துள்ள முடிவை உதாரணமாகக் காட்டி, கொள்கை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி எச்சரிக்கை விடுத்தார்.

எரிபொருள் கொள்வனவுக்கான கடந்த ஆட்சியின் பகிரங்க ஏலத்தை இடைநிறுத்துவதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள் ☞ 2

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த அறிக்கைகளை உடன் வெளியிடுக

### முன்னாள் எம்.பி. நிமல் லன்ஸா வலியுறுத்து

கத்தோலிக்க திருச்சபை மற்றும் கத்தோலிக்க மக்களை ஏமாற்றாமல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கைகளை உடனடியாக மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்ஸா.

பொதுஜனபெரமுனகட்சியின் ஊடாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற நிமல் லன்ஸா, அரகலய போராட்டத்திற்குப் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவின் தீவிர ஆதரவாளராக மாறியவர். தற்போது 'சிலின்டர்' சின்னத்தில் தேர்தலை எதிர்கொள்கிறார்.

நீர்கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம்பேசிய அவர், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அறிக்கைகளில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் அவை தொடர்பில் விசாரிக்கப்படவேண்டும்என்றும் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மிகவும் உணர்ச்சிகரமான விடயமாகும். எனவே அந்த தாக்குதல்கள் தொடர்பான அறிக்கைகளைவெளியிட்டு ☞ 8

## தேர்தல் வெற்றிகள் தொடர்பான ஜோதிட கணிப்புக்களுக்கு தடை

### அது சட்ட மீறல் என்கிறது தேர்தல் ஆணைக்குழு

எதிர்வரும் பொது தேர்தலில் தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு ஆதரவாக ஜோதிட கணிப்புகளை செய்வதை தவிர்க்குமாறு அனைத்து ☞ 2

## மட்டக்களப்பில் வியாழேந்திரன் ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவு

தமிழ் அரசுக் கட்சியிலிருந்து பிரிந்துசென்றுராஜபக்சஆட்சியில் இணைந்துகொண்டமட்டக்களப்பு மாவட்டமுன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன், 2024 தேர்தலில் தனது ஆதரவு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு என்று அறிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடுவதற்கான வியாழேந்திரனின் விண்ணப்பம் ☞ 2

# கைவிரல் அடையாளம் குறித்து தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தலில் வாக்களிக்கும் வாக்காளர்களின் விரலில் குறியிடுதல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு அதி விசேட வர்த்தமானி அறிவித்தலொன்றை விடுத்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்காளர்களின் இடது கை சிறு விரலில் அடையாளம் இடப்பட்டுள்ளமையால், உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 53அ (3) ஆம் பிரிவின் பிரகாரம் 2024.10.26 ஆம் திகதி நடைபெறவுள்ள எல்பிட்டிய பிரதேச தேர்தலின் போது வாக்காளர்களின் இடது கை பெருவிரலில் அடையாளமிடப்படும் என அதில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளரின் இடது கையில் பெருவிரல் இல்லாதிருக்கும் பட்சத்தில், அவரது வலது கையில் உள்ள வேறேதெனுமொரு விரலில் அடையாளமிடப்படும் தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி இடம்பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் விரலில் அடையாளமிடுவது தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## இனி இது .....

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மட்டும் இன்னும் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நடத்தவில்லை.

இந்தக் கூட்டணியில் உள்ள கட்சிகள் ஆங்காங்கே தேர்தல் சந்திப்புக்களில் ஈடுபட்டு வந்தாலும் கூட்டணியாக எந்தவொரு தேர்தல் பரப்புரையிலும் ஈடுபடவேயில்லை. தமிழ் அரசுக் கட்சிக்கு ஏட்டிக்குப் போட்டியாக இவ்வளவுக்கும் களத்தில் குதித்திருக்க வேண்டியவர்கள் ஏன் அடக்கி வாசிக்கிறார்கள் என்று மெல்ல நோண்டிப் பார்த்தேன். விவகாரம் இருக்கத்தான் செய்கிறது. வெளிப் பார்வைக்கு இந்தக் கூட்டு 5 கட்சிகள் சேர்ந்த ஒரு அமைப்பாகத் தெரிந்தாலும் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி அதற்குள் நடந்த குத்துவெட்டுக்களால் உருக்குலைந்து கிடக்கிறது. இந்தத் தேர்தலோடு சரி, இனி இந்தக் கூட்டுக்குள் இருப்பதில்லை என்ற நிலைக்கு ஓரிரு கட்சிகள் இப்போதே வந்துவிட்டன என்று தகவல்.

கூட்டுக்குள் ரெலோ திட்டமிட்டு சிறிகாந்தாவின் தமிழ்த் தேசியக் கட்சியை உள்ளடிவேலைகளால் கவிழ்த்திருப்பது பெரும் சர்ச்சையாக வெடித்து ஒருவித சுமூகமற்றநிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைமைப் பீடக் கூட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் ஒவ்வொரு கட்சிக்கும் ஒதுக்கப்படும் ஆசனங்களின் எண்ணிக்கைகள் முடிவு செய்யப்பட்டன. அதன் அடிப்படையில் சிறீகாந்தாவின் கட்சி தனக்கு யாழ்ப்பாணத்தில் 2, வன்னியில் 1, மட்டக்களப்பில் 1 ஆசனங்களைக் கேட்டது. திருகோணமலையில் தமிழ் அரசுக் கட்சியின் கீழ் அதன் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுவதால் ஒதுக்கப்பட்ட ஒரு இடத்திற்கும் வேட்பாளரை நியமிக்கும் வாய்ப்பும் தமிழ்த் தேசியக் கட்சியை வந்தடைந்தது.

திருகோணமலையில் கிடைத்த ஒரு வேட்பாளருக்கான ஆசனத்திற்கு, தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் பிரதேச சபைத் தலைவர் ஒருவரையே சிறீகாந்தாவின் கட்சி முதலில் முன்மொழிந்தது. ஆனால், தமது கட்சியைச் சேர்ந்தவரையே இவர்கள் முன்மொழிவது பற்றி தமிழ் அரசுக் கட்சிக்குள் எதிர்ப்புக் கிளம்பியது. அதையடுத்து அந்த இடத்திற்குத் தானே போட்டியிடுவதற்கு சிறீகாந்தா முன்வந்திருந்தார். திருகோணமலையில் இதற்கு முன்னரும் அவர் போட்டியிட்டிருக்கின்றார். சம்பந்தர் போட்டியிட்டபோதே சீறிகாந்தா அங்கு 25 ஆயிரம் விருப்பு வாக்குகளையும் பெற்றிருக்கிறார். எனவே அந்த ஆதரவுத் தளத்தைப் பயன்படுத்தி அங்கு போட்டியிடலாம் என்று சிறீகாந்தா முடிவெடுத்திருக்கிறார். தனது விருப்பத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

அவர் போட்டியிட முன்வந்தது தெரிந்ததும் ஜனநாயகக் கூட்டுக்குள் இருந்தே வந்த அழுத்தம் காரணமாக சிறீகாந்தாவைத் தவிர்த்துவிட்டு அவர் தரப்பால் முதலில் பிரேரிக்கப்பட்டவரின் பெயரையே போட்டு பட்டியலை வேட்பாளர் பட்டியலை முடித்து விட்டார்கள். வேட்பாளர் விண்ணப்பங்கள் தமிழ் அரசுக் கட்சியின் கையிலேயே இருந்தன. சிறீகாந்தா வந்தால் அவர் தனக்கும் போட்டியாகக் கூடும் என்று தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளர் குகதாசனும் நினைத்திருப்பார் போலும், போதாததற்கு சிறீகாந்தாவை வெட்டி விடுவதற்கு அவர்கள் தரப்பிலிருந்தே வந்த அழுத்தத்தைக் காரணமாகக் காட்டிக்கொண்டு வேட்பாளர் பட்டியலைப்பூர்த்தி செய்து விட்டார்கள்.

இப்படி உள்ளடி வேலைகளால் சிறீகாந்தாவை வீழ்த்திய ஜனநாயகக் கூட்டணியினர், வன்னி மற்றும் மட்டக்களப்பிலும் அவரது தரப்புக்கு வழங்குவதாக உறுதிளித்த ஒரு வேட்பாளருக்கான வாய்ப்பையும் தட்டிப் பறித்து விட்டார்கள். வன்னி மாவட்டத்தில் சிறீகாந்தா தரப்பு நல்லதொரு வேட்பாளரை வைத்திருந்தார்கள். ஆனால், கடைசிவரை நம்ப வைத்துவிட்டு அவரது கட்சிக்குரிய இடத்திற்கும் தமது வேட்பாளரையே போட்டு நிரப்பிவிட்டது ரெலோ. காரணம் வன்னியில் வேட்பு மனு ரெலோவின் கையிலேயே இருந்தது. அதுபோலவே, மட்டக்களப்பிலும் ஜனநாயகக் கூட்டணியின் வேட்புமனு ரெலோவின் கையிலேயே இருந்தது. அங்கும் தனது கட்சிக்கு ஓர் இடம் வேண்டும் என்று சிறீகாந்தா கேட்டிருந்தார். கடைசி வரைக்கும் அவரை நம்ப வைத்துவிட்டு ஏமாற்றிவிட்டார்கள். அங்கும் அவரது இடத்திற்கு ரெலோவே ஒரு வேட்பாளரைப் போட்டுவிட்டது.

கடைசியாகக் கூடிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தலைமைப்பீடத்தின் 'சூம்' கூட்டத்தில் இது தொடர்பில் கடுமையான வாக்குவாதங்கள் இடம்பெற்றுள்ளன. சிறீகாந்தா தனக்கு இழைக்கப்பட்ட து-ரோகத்தைப் பற்றிச் சகட்டுமேனிக்கு விளாசித்தள்ளிவிட்டார். திருகோணமலையில் தன்னை வெட்டிவிடுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிக்குபுளொட், ஈபிஆர்எல்எவ் கட்சிகள் கூட எதிர்ப்புக்காட்டாமல் அமைதிகாத்தது-குறித்தும் அவர் ஒரு பிடி பிடித்தார். ரெலோவுக்குள் தனக்கு உரிய இடம் தருகிறார்கள் இல்லை என்றுதான் சிறீகாந்தாவும் சிவாஜிலிங்கமும் வெளியே வந்து தனிக் கட்சி அமைத்தார்கள். அப்படியிருந்தும் மீண்டும் மீண்டும் ரெலோ தன்னைச் சூழ்ச்சிகளால் வீழ்த்துவது குறித்துக் கொதித்துப் போயிருந்த சிறிகாந்தா கோபத்தை முழுதாக இம்மை மறுமை இல்லாமல் காட்டினார். அது ஏதோ ரெலோவின் பிரச்சினை என்பதுபோல மற்றைய கட்சிகளின் தலைவர்கள் ஒதுங்கியிருந்து விட்டனர்.

இதனால் இன்னும் அதிகம் கோபமடைந்திருக்கும் சிறீகாந்தா, இந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் தனது தரப்பு வேட்பாளர்களான சிவாஜிலிங்கத்தையும் ஜனாவையும் ஆதரித்து ஏற்பாடு செய்யப்படும் கூட்டங்களைத் தவிர்த்து எந்தவொரு கூட்டத்திலும் பங்கேற்பதில்லை என்றும் ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் பரப்புரைகளுக்கு ஒத்துழைப்பதில்லை என்றும் முடிவெடுத்திருக்கிறாராம். அதுமட்டுமல்லாமல் இத்தோடு இந்தக் கூட்டுக்குச் சாவுமணி அடிக்கவேண்டும் என்று அவரது கட்சியினர் இப்போது சன்னதம் கொள்ளத் தொடங்கியிருக்கின்றனராம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வலி.வடக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்கிரமிக்கப்பட்டு முகாமிடப்பட்டிருந்தன. அவற்றில் கணிசமான காணிகள் போருக்குப் பின்னரான கடந்த 15 ஆண்டுகளில் படிப்படியாக விடுவிக்கப்பட்டன. எனினும் பலரது காணிகள் விடுவிக்கப்படவேண்டி உள்ளன.

இந்தப் பகுதி வளமான தோட்டக் காணிகளைக் கொண்டது. பொதுமக்களின் இந்தக் காணிகளில் தற்போது படையினர் விவசாயச் செய்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். 1990ஆம் ஆண்டு இந்தப் பகுதியிலிருந்து படைநடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் 35 வருடங்களாக இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள்.

வலி. வடக்கு பிரதேசத்தில் உள்ள இந்தக் காணிகளின் விடுவிப்பு சம்பந்தமாக நேற்று அந்தப் பகுதியில் பொது அமைப்புக்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அங்கு பேசிய சந்திரசேகரம், இந்தக் காணிகள் தொடர்பில் ஜனாதிபதி ஏற்கனவே கவனம் செலுத்தியுள்ளார் என்றார்.

அக்கூட்டத்தில் தமது சொந்தக் காணிகள் தொடர்பாகவும், விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற்றம் தொடர்பாகவும் மக்கள் பல கோரிக்கைகளை முன் வைத்தனர். 35 வருடங்களாகத் தமது சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்துள்ள பலர் தமது மன ஆதங்கங்களையும் வேதனைகளையும் கொட்டித் தீர்த்தனர்.

மக்களின் கருத்துக்களைச் செவிமடுத்த சந்திரசேகரம், காணி விடுவிப்புத் தொடர்பில் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஏற்கனவே கலந்துரையாடி அது தொடர்பான விவரங்களைக் கோரியுள்ளார் என்றார்.

வலி. வடக்கு பிரதேசத்தில் உள்ள இராணுவத்தின் பயன்பாட்டில் உள்ள காணிகள் பெரும்பாலானவற்றை விடுவித்து தருவோம் என்று அங்கு கூடியிருந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் மக்களுக்கும் உறுதிமொழி வழங்கினார்.

## கொள்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் அவரது 'எக்ஸ்' தளத்தில் பதிவொன்றை வெளியிட்டு அவர் தெரிவித்துள்ளதாவது:

இன்று நாம் இருக்கும் நிலைமைக்கு கொள்கை முரண்பாடும் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது. இந்திய அரசு எயார் இந்தியாவை தனியார்மயமாக்கும் முடிவை எடுத்தபோது, தேசிய பெருமைக்காக ஸ்ரீ லங்கன் எயாலைன்ஸை அரசின் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்று எங்கள் ஆட்சயாளர்கள் வலியுறுத்தினர். 2008இல் இதேபோன்ற காரணங்களுக்காக எமிரேட்ஸ் நிர்வாக ஒப்பந்தத்தை நாங்கள் நிறுத்தினோம். இந்த செயற்பாடுகளின் விளைவாக இலங்கை தற்போது 1.2 பில்லியன் டொலர் நட்டத்தை எதிர்நோக்கி வருகின்றோம் என்பதை குறிப்பிட்டாகவேண்டும் என்றார்.

## வஸ்கடுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுவரெலியா, நவஎலிய பகுதியைச் சேர்ந்த பாக்யவன் செல்வநாயகம் (வயது 26) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் திருமணமானவர் என்றும் மொறொந்துடுவ பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றில் பணியாற்றி வருகின்றார் என்றும் களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல் போன இளைஞன் தனது நண்பர்களுடன் நீராடுவதற்காக கடற்கரைக்கு வந்திருந்த நிலையில் திடீரென அலையில் சிக்கி காணாமல் போனார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜோதிடர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு விடுத்துள்ளது.

இதுபோன்ற கணிப்புகளை வெளியிடுவது தேர்தல் சட்டப்படி கடுமையான குற்றமாகும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறான கணிப்புகளை வெளியிடுவோருக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என்றும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நடைபெறவுள்ள 2024 பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் விதிமீறல்களை தெரிவிக்க பிணக்குத் தீர்க்கும் நிலையங்களை தேர்தல்கள் ஆணைக்குழு நிறுவியுள்ளது.

இதன்படி கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, ஆகிய பிரதேசங்களில் முறைபாடுகளை தெரிவிக்கலாமென தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது

## மட்டக்களப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் இந்தத் தேர்தலில் போட்டியிடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் தனது ஆதரவு ஜனநாயகக் கூட்டணிக்கே என்று அவர் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் வலிமையான ஓர் அரசியல் கட்டமைப்பினால்தான் தமிழர்களின் இருப்பினை பாதுகாக்கமுடியும் என்ற அடிப்படை தத்துவத்துடனேயே 2018ஆம் ஆண்டு முற்போக்கு தமிழர் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இன்று வரையில் அந்த நோக்கத்தினை கருத்தில்கொண்டே செயற்பட்டுவருகின்றோம்.

தேவையற்ற விமர்சனங்களைப் புறந்தள்ளி ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை ஏற்றுக்கொண்டு செயற்பட்டுவந்ததன் காரணமாக இரண்டு தேர்தல்களில் நாங்கள் வெற்றிபெற்றோம்.

அந்த வகையில் நாங்கள் எதிர்கொண்ட மூன்றாவது தேர்தல் 2024 நாடாளுமன்றத் தேர்தல். இந்தத் தேர்தலில் நாங்கள் களம் காணவிருந்தோம். துரதிர்ஷ்டவசமாக எங்களது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இலங்கையில் 70க்கும் அதிகமான கட்சிகள், சுயேச்சைக் குழுக்களின் விண்ணப்பங்கள் இந்தத் தேர்தலில நிராகரிக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்றாக நாங்கள் போட்டியிடவிருந்த ஜனநாயக தேசிய கூட்டணியினுடைய வேட்பு மனுவும் நிராகரிக்கப்பட்டது.

இந்தத் தேர்தலிலும் நாங்கள் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் இருந்தன. காரணம் எங்களது பலமான கட்டமைப்பு. அந்தக் கட்டமைப்பில் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் அர்ப்பணிக்கின்ற கழக உடன்பிறப்புகள். சிறு விடயத்தைக் கவனத்தில்கொள்ளாததால் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது.

ஒரு ஆளும் பெரும்பான்மை கட்சியில் எட்டுத் தமிழர்களை மட்டக்களப்பில் களமிறக்கியவர்கள் நாங்கள். அதில் நாங்கள் வெற்றியும் கண்டோம். பெரும்பான்மைக் கட்சிகளில் குறிப்பாக மூவினங்களையும் சார்ந்தவர்கள் இணைந்து செயற்படுவார்கள். கடந்த காலத்தில் எம்மவர்கள் சேர்க்கும் வாக்களால் எம்மவர்கள் வெற்றிபெறுவதில்லை. ஏனைய சமூகங்களைச் சேர்ந்தவர்களே வெற்றிபெற்றுவந்தார்கள். அதுவே மட்டக்களப்பின் வரலாறு. அந்த வரலாற்றினை முதன்முறையாக உடைத்தவர்கள் நாங்கள்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் வெற்றிபெற்றவர்கள் அதிலிருந்து வெளியேறி வேறு கட்சியில் கேட்டு வெற்றிபெற்றதாக எந்தச் சரித்திரமும் இல்லை. ஆனால் வீட்டுச் சின்னத்திலிருந்து வெளியேறி வெற்றிபெற்ற முதலாவது நபர் நான்தான். அதுவொரு வரலாற்றுப் பதிவு. அரச கட்சியில் கடந்தகாலத்தில் போட்டியிட்டு தோல்வி கண்டவர்கள் பின்னர் வீட்டில் கேட்டு வெற்றிபெற்ற வரலாறுதான் இருந்தது.

எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல்களில் நாங்கள் களமிறங்குவோம். இடைப்பட்ட காலத்தில் நாங்கள் இல்லாத இடைவெளி உணரப்படும்.

தமிழ்ச் சமூகத்திற்குத் தேவையான, நீதியான, தரப்படவேண்டிய விடயங்களைப்பற்றியே நாங்கள் பேசுவோம். இன விகிதாசாரப்படி நான்கு தமிழ் பிரதிநிதிகள் மட்டக்களப்பில் தெரிவுசெய்யப்படவேண்டும். அந்த அடிப்படையில் ஒரு தமிழ் கட்சிக்கு ஆதரவினை வழங்கலாம் என்ற தீர்மானத்திற்கு வந்துள்ளோம். கழக உறுப்பினர்களின் அனைவரது கருத்தினையும் எடுத்து ஒரு தீர்மானத்தினை எடுத்திருக்கின்றோம்.

அதன்படி, இந்த நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் முற்போக்கு தமிழர் கழகமானது முழுமையாக எங்களது ஆதரவினை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு வழங்குவதற்குத் தீர்மானித்திருக்கின்றது.

நாங்கள் ஒரு தனிப்பட்ட நபருக்கு எங்களது ஆதரவினை வழங்கவில்லை. சங்குச் சின்னத்தில் அவர்கள் களமிறங்கியுள்ளார்கள். அவர்களுக்கு முழுமையான ஆதரவினை வழங்குகின்றோம். தமிழ்ப்பிரதிநிதித்துவத்தினை பாதுகாப்பதற்காக தயவுசெய்து முழுமையான ஆதரவினை ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

## பொலிஸாரின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கு வீடுகளை வழங்குவது மிகவும் அவசியம்.

சுற்றுலா விசாவில் வரும் சில வெளிநாட்டவர்கள் நாட்டில் சட்டவிரோதமாக தங்கி ஒன்லைனில் சட்டவிரோதமாக பணம் சம்பாதிப்பாதிக்கின்றனர். இவ்வாறான நபர்களுக்கு வீடுகளை வழங்குவதும் தவறாகும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நாடாளுமன்றம் சென்ற மலையக பிரதிநிதிகள் என்ன செய்தனர்?

## அனுஷா சந்திரசேகரன் கேள்வி



'இலங்கையில் கொள்கை அரசியலை முன்னெடுத்த பெருந்தலைவர் அமரர் சந்திரசேகரனின் மகள்தான் நான். மாறாக கோடிகளுக்கு விலைபோகும் நபர் கிடையாது. கோடிகளை வாங்கிய அரசியல்வாதிகளே, இன்று கோடிகளைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றனர்.' என்று ஐக்கிய ஜனநாயக குரல் எனும் கட்சியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

தலவாக்கலையிலுள்ள தேர்தல் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

" 2020 பொதுத்தேர்தலில் நான் சுயேச்சையாக களமிறங்கி இருந்தேன். அப்போதுகூட முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்சவிடம் 20 கோடி ரூபா பணம் வாங்கிவிட்டே தேர்தலில் போட்டியிட்டதாக எதிரணி தரப்பில் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல வாக்குகளை சிதறடிப்பதற்காகவே நான் களமிறக்கப்பட்டுள்ளேன் என்றெல்லாம்கூட தகவல்கள் பரப்பட்டன. ஆனால் இவை எதுவும் உண்மை அல்ல. எனது தந்தையின் நண்பர்களின் உதவியுடன்தான் பொதுத்தேர்தலை எதிர்கொண்டேன்.

தேர்தலில் மக்கள் எனக்கு ஆதரவு வழங்கி இருந்தனர். எனினும், நாடாளுமன்றத்துக்கு தெரிவாகக்கூடிய வாக்குகளை நோக்கி நகரமுடியவில்லை. இவ்வாறு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெறாததால் அரசியல் ரீதியில் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டேன்.

எனக்காக வேலை செய்த தொண்டர்களைக்கூட பழிவாங்கினார்கள். இதற்கு எதிராக குரல் எழுப்பினேன். அவ்வாறு குரல் எழுப்பும் வேளைகளில் பழிவாங்கல்கள் அதிகரித்தன. அதன்பின்னர் அமைதி காத்தேன். அடக்குமுறைகள் குறைந்தன. எனவே, அரசியலில் அமைதியும் தேவையெனக் கருதி அமைதி காத்தேன்.

நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்காத நான் ஐந்து வருடங்கள் எங்கே சென்றேன் எனக் கேட்கின்றனர். ஆனால் நாடாளுமன்றம் சென்ற எமது மலையக பிரதிநிதிகள் என்ன செய்தனர்? தொலைக்காட்சி விவாதங்களில்கூட அடித்துக்கொள்ளும் நிலைமை அல்லவா காணப்பட்டது?

பொதுத்தேர்தலில் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து களமிறங்க வேண்டும் என்பதே எனது எண்ணமாக இருந்தது. எனினும், அதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை. அதன்பின்னர் சுயேச்சையாக போட்டியிட திட்டமிட்டிருந்தேன்.

அவ்வேளையிலேயே தலைவர் ரஞ்சன் ராமநாயக்க என்னை அழைத்து கதைத்தார். ஊழல் அற்ற அரசியலை செய்வதற்காக புதிய கட்சியொன்றை ஆரம்பித்துள்ளதாகக் கூறினார். அதில் போட்டியிடுமாறு கேட்டுக்கொண்டார். ஐக்கிய ஜனநாயகக் குரல் என்ற அந்த கட்சியின் கொள்கை பிடித்திருந்தது . அதனால்தான் அக்கட்சி ஊடாக களமிறங்கியுள்ளேன்.

2020 இல் பஸில் ராஜபக்சவிடம் பணம் வாங்கியதாகக் கூறினார்கள். அது உண்மையெனில் தேர்தலின் பின்னர் நான் ஆளுங்கட்சியுடன் பதவிகளை பெற்று அல்லவா இருந்திருக்க வேண்டும்? அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. கடந்த முறை 20 கோடி என்றவர்கள் இம்முறை 15 கோடி என்கிறார்கள்.

இது பொய். கோடிகளுக்கு விலைபோகும் நபர் நான் கிடையாது. எனது தந்தை அமரர் சந்திரசேகரனின் வழியிலேயே நான் பயணிக்கின்றேன். கொள்கை அரசியலை முன்னெடுத்த தலைவரின் மகள் நான். எனவே, கோடிகளுக்கு விலைபோனவர்கள்தான் இன்று கோடிகளைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றனர்.

மலையக மக்களுக்கு நான் எதுவும் செய்யவில்லை என என்னை பற்றி அறியாத சிலரே விமர்சிக்கின்றனர். திரைமறைவில் பல நலன்புரி திட்டங்களை முன்னெடுத்துவருகின்றேன். அவற்றை வெளிப்படுத்த விரும்பவில்லை. இதற்கு நலன்விரும்பிகளும் உதவிகளை வழங்கிவருகின்றனர்.

மலையகத்தில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை நிச்சயம் மாற்றம் வரும். பழைய அரசியல்வாதிகளை நம்பி ஏமாந்ததுபோதும், இளைஞர்கள், புதியவர்கள் வரவேண்டும் என மக்கள் கருதுகின்றனர்.

எனவே, மக்களுக்காக குரல் கொடுக்கும் என்னை அவர்கள் சபைக்கு அனுப்பி வைப்பார்கள். நாடாளுமன்ற தேர்தலில் நிச்சயம் வெற்றிபெறுவேன்." என்றார்.(05)

# சுன்னாகம் லயன்ஸ் கழக ஏற்பாட்டில் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம்



சுன்னாகம் லயன்ஸ் கழகம், சுன்னாகம் லியோ கழகம், வாழ்வகசமூகம் என்பன இணைந்து சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வும் விழிப்புணர்வு நடைபவனியும் நேற்று(வியாழக்கிழமை) காலை 9 மணிக்கு சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க முன்றிலில் இருந்து பேரணி ஆரம்பமாகி சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையத்தை அடைந்து அங்கு வாழ்வகத் தலைவரின் விழிப்புணர்வு உரை இடம்பெற்று மீண்டும் சுன்னாகம் சந்தியை அடைந்து வாழ்வகம் வரை சென்றடைந்தது.



சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் த.அகிலன், வாழ்வகம் விழிப்புலனற்றோர் இல்லத் தலைவர் ஆ.இரவீந்திரன் ஆகியோர் இணைத் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் லயன் ம.மயூரதன் பிரதம விருந்தினராகவும், சுன்னாகம் லயன்ஸ் கழக சிரேஷ்ட உறுப்பினர் லயன் ந.சண்முகவேல் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் விருந்தினர்களில் ஒருவராகக் கலந்துகொண்டு பார்வையற்றவாழ்வகசிறார்களுக்கு வெள்ளைப் பிரம்புகளை வழங்கிவைத்தார்.

இந்த நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்கள், சுன்னாகம் லியோ கழக உறுப்பினர்கள், வடபகுதி லயன்ஸ் கழக உறுப்பினர்கள் மற்றும் வாழ்வக சமூகத்தினர் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் சேவைத்திட்டங்களாக யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தின் ஆரம்ப கால உறுப்பினர் க.பொ.த. சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறு பெற்ற விழிப்புலன் வலுவிழந்த மாணவனுக்கு ஒரு மாதம் 5 ஆயிரம் ரூபா வீதம் ஒருவருடத்துக்கு வழங்கியுள்ளார்.

இதைவிட, சுன்னாகம் லயன்ஸ் கழக முன்னாள்



தலைவர் லயன் செ.விஜயராஜ் 15 ஆயிரம் ரூபாவும் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் ந.சண்முகவேல் 10 ஆயிரம் ரூபாவும் வாழ்வகத்திற்கு வழங்கிவைத்தனர். அத்துடன் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் ந.சண்முகவேல் க.பொ.த. உயர்தரத்தில் 3ஏ சித்திபெற்ற யாழ்.இராமநாதன் கல்லூரி மாணவிக்கு உஜதொகை பணத்தை வழங்கிக் கௌரவித்தார்.

அத்துடன், வாழ்வக மாணவர்களின் பாவனைக்கென சுன்னாகம் லயன்;கழக உறுப்பினர் லயன் சிசில் றெமிண்டஸ், சுன்னாகம் லியோ கழக செயலாளர் லியோ மதுமிதா டினேஸ் மற்றும் கட்டட ஒப்பந்தகாரர் சங்கர் ஆகியோர் வாழ்வக மாணவர்களுக்கு தேவையான ஒரு தொகுதி பொருள்களை வாழ்;வக நிர்வாகத்திடம் கையளித்தனர்.

பேரணியில் கலந்துகொண்டவர்;களுக்கு சிற்றுண்டிகளையும் தேநீர் உபசாரத்தையும் சுன்னாகம் மது கிறீம் ஹவுஸ் உரிமையாளரும் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினருமான லயன் க.டினேஸ் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# ஏச்பிவி தடுப்பூசி செலுத்தப்பட்ட 5 மாணவிகள் திடீர் சுகயீனமுற்று வைத்தியசாலையில் சேர்ப்பு

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுப்பதற்கான ஏச்பிவி தடுப்பூசி செலுத்தப்பட்ட 5 மாணவிகள் திடீர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக அங்குருவாதொட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

7 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் 12 வயதுடைய ஐந்து மாணவிகளே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

அங்குருவாதொட்ட, வெனிவல்பிட்டி பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றிற்குச் சென்ற மில்லனிய சுகாதார வைத்திய அதிகாரிகள் சிலர் அப்பாடசாலையில் 7 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் 26 மாணவிகளுக்கு கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுப்பதற்கான ர்ஊஏ தடுப்பூசியை செலுத்தியுள்ளனர்.

இதன்போது, ர்ஊஏ தடுப்பூசியை செலுத்தப்பட்ட மாணவிகளில் ஐவர் திடீரென சுகவீனமுற்றுள்ளனர்.

இதனையடுத்து, சுகவீனமுற்ற மாணவிகள் ஐவரும் ஹல்தொட்ட பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ஹொரனை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இது தொடர்பில் அங்குருவாதொட்ட பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தேவை தேசியக் கொள்கை

வலி. வடக்கு பகுதிகளில் இலங்கைப் படையினர் ஆக்கிரமித்து வைத்துள்ள மக்களின் காணிகளில் பெரும்பாலானவற்றை விடுவித்துத் தருவோம் என்று உறுதிமொழி வழங்கியுள்ளார் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரம். இந்தக் காணிகள் தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க ஏற்கனவே கவனம் செலுத்தி வருகிறார் என்றும் அவர் தெரிவிதுள்ளார்.

யாழ். மாவட்டத்தின் வடக்கே உள்ள வலி. வடக்கு பகுதியில் பலாலி விமானப் படைத் தளம் மற்றும் காங்கேசன் துறைமுகம் ஆகியவற்றைச் சூ–ழவுள்ள மக்கள் காணிகள் போர்க் காலத்தில் அரச படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு முகாமிடப்பட்டிருந்தன. அவற்றில் கணிசமான காணிகள் போருக்குப் பின்னரான கடந்த 15 ஆண்டுகளில் படிப்படியாக விடுவிக்கப்பட்டன. எனினும் பலரது காணிகள் விடுவிக்கப்படவேண்டி உள்ளன.

இந்தப் பகுதி வளமான தோட்டக் காணிகளைக் கொண்டது. பொதுமக்களின் இந்தக் காணிகளில் தற்போது படையினர் விவசாயச் செய்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். 1990ஆம் ஆண்டு இந்தப் பகுதியிலிருந்து படை நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் 35 வருடங்களாக இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களது மூன்றாவது தலைமுறையினர் தமது சொந்த இடம் பற்றிய அறியாமலேயே வளர்ந்தும்விட்டனர். ஆனாலும் அந்த மக்களின் காணி விடுவிப்புக் கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

பலாலி வான் படைத்தளம் மற்றும் பலாலி தரைப் படைத்தளத்தைச் சுற்றியுள்ள இந்தப் பகுதிகள் படை நடவடிக்கைகளினாலேயே ஆக்கிரமிக்கப்பட்டன. போர் முடிந்து 15 ஆண்டுகளாகிவிட்டபோதும், அதற்குப்பின்னர்வடக்குகிழக்கில்இருந்துஆயுதரீதியானஅச்சுறுத்தல் எவையும் எழாதபோதும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை தமது முகாம்பகுதிகள் என்று கூறிக்கொண்டு வெளியேற மறுக்கின்றனர் படையினர்.

கடந்த 15 ஆண்டுகளில் பாதுகாப்பு அச்சுறுத்தல் மீளாய்வுகளின் அடிப்படையில் வடக்கிலிருந்து படையினர் குறைக்கப்பட்டுள்ளனர் என்றும் இரண்டு படைப்பிரிவுகள் அகற்றப்பட்டுள்ளன என்றும் பாதுகாப்புத் தரப்பினர் கூறுகின்றனர். ஆனாலும் மக்களின் காணிகள் விடுவிக்கப்படாமல் முகாம் பகுதிகள் என்ற பெயரில் தொடர்ந்தும் ஆக்கிரமித்து வைக்கப்பட்டுள்ளன. படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பெரும்பாலானவை உறுதிகள் உள்ள தனியார் காணிகள். போர் மற்றும் படையினரின் ஆக்கிரமிப்புக் காரணமாக காணி உரிமையாளர்கள் பலர் வேறு நாடுகளிலும் அரசியல் தஞ்சம் பெற்று அங்கேயே நிரந்தரக் குடிகளாகவும் மாறிவிட்டனர்.

இத்தகைய நிலையில் வலி. வடக்கு காணிகளை விடுப்பது குறித்து அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க ஆராய்ந்து வருகிறார் என்று சந்திரசேகரம் தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்கது என்றபோதும், பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அது மட்டுமே போதுமானதல்ல. வடக்கு கிழக்கில் பொது மக்களின் காணிகள் மட்டுமல்ல, முன்னர் பொது மக்களின் பயன்பாட்டில் இருந்த அரச, பொதுச் சொத்துக்கள் பலவும்கூட படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ளன. வலி. வடக்கில் படையினரால் நடத்தப்படும் 'தல்செவன' உல்லாச விடுதி அதற்கொரு நல்ல உதாரணம். வலி. வடக்கு பிரதேச சபைக்குரிய சுற்றுலா விடுதியையே படையினர் இப்போது தமது வர்த்த அமைவிடமாக மாற்றியுள்ளனர். இதுபோன்ற பல வர்த்தக நிலையங்களைக் கொண்ட சங்கிலி படையினரால் நாடு முழுவதும் உருவாக்கப்பட்டுள்ளது. அவற்றில் பல ஆக்கிரமிக்கப்பட காணிகளிலேயே உள்ளன. படை முகாம்களும் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளிலேயே உள்ளன.

தாம் ஆண்டு அனுபவித்த இந்த இடங்களில் இருந்தும் வருமானங்களில் இருந்தும் படையினர் தாமாகவே விலகிச்சென்று மக்களுக்கு வழிவிடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அந்த வசதிகளையும் வாய்ப்புக்களையும் சொகுசுகளையும் தொடர்ந்தும் அனுபவிப்பதற்காக பாதுகாப்பு காரணங்களை முன்னிறுத்தி அவர்கள் சாக்குப் போக்குச் சொல்வார்கள் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதே. இந்த ஆக்கிரமிப்புக்கள் மூலம் படை அதிகாரிகள் பலருக்கு மேலதிக வருமானங்கள் கசிகின்றன என்ற உண்மையையும் ஏற்றுத்தானாகவேண்டும். எனவே இந்த இடங்களை அவ்வளவு இலகுவில் படையினர் தாமாக விட்டு விலகுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

மயிலே மயிலே என்றால் மயில் இறகு போடாது என்பதுபோல படையினரும் ஆக்கிரமிப்புக்களில் இருந்து தாமாக வெளியேறப் பின்னடிப்பார்கள். அதனால் படையினரின் ஆக்கிரப்பில் உள்ள இடங்களை பொது மக்களிடமும் பொது அமைப்புக்களிடமும் திரும்ப ஒப்படைப்பது தொடர்பில் தேசியக் கொள்கை ஒன்றை ஆளும்தரப்பு உருவாக்குவதே இதற்குப் சாலப் பொருத்தமான தீர்வாக இருக்கும். காலவரையறையுடன் கூடியதாக அந்தக் கொள்கைத் திட்டம் இருக்கும் பட்சத்திலேயே ஆக்கிரமிப்புக்களில் இருந்து படையினரை வெளியேற்றுவது சாத்தியமாகும். யாழ்ப்பாணம், வன்னி, கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகள் மற்றும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் படையினரின் ஆக்கிரமிப்பிலுள்ள காணிகளைத் திரும்ப ஒப்படைப்பதற்கான தேசியக் கொள்கையாக அது அமைந்திருக்கவேண்டும்.

இந்தப் பிரச்சினைக்கான தீர்வைப் படைத்துறைத் தரப்பிலிருந்து எதிர்பார்த்தால் அது நடக்கக்கூடியதல்ல. அதற்கு அரசியல் தரப்பிலிருந்தே தீர்வு முன்வைக்கப்படவேண்டும்.

# தமிழரின் கதியும் விதியும்

**என். சத்திய மூர்த்தி**

தென்னிலங்கையில் தனது மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தொண்டர்களுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க, தமிழர் அரசியல் குறித்து ஒரு செய்தி தெரிவித்துள்ளார். தன்னை (அண்மையில்?) சந்தித்த தமிழ் தலைவர் ஒருவர், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரது அரசை ஆதரித்துச் செயல்படுவார்கள் என்றும் அவர் கூறியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அநுர ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், அவரைச் சந்தித்ததாக வெளிப்பட அறிக்கைவிட்டது இரண்டு தலைவர்கள் (மட்டுமே). முதலில், சிறீதரன். அடுத்த நாளே சுமந்திரன். இருவருமே தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் களமிறங்குகிறார்கள். இவர்களுக்கு அப்பால், வேறு எந்தவொரு தமிழ் தலைவரும் ஜனாதிபதியை சந்தித்தார்கள் என்று தெரியவில்லை. அவ்வாறு சந்தித்திருந்தால், அது பொதுவெளிக்கு வரவில்லை.

இருவரில், சிறீதரன், இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் தீர்வை புதிய அரசு தரவேண்டும் என்று அனுரவிடம் தான் கோரினார் என்று பின்னர் அறிக்கை விட்டார். சுமந்திரனோ, ஜனாதிபதியுடனான தனது சந்திப்பில், கடந்த அரசிடமிருந்து 'பார் பெர்மிட்' பெற்றுக்கொண்ட (தமிழ்) அரசியல்வாதிகளின் பெயர்களை வெளியிட வேண்டும் என்று(ம்) தான் கேட்டுக்கொண்டார் என்று அறிவித்தார்.

இதில் சிறீதரனது சந்திப்புக் குறித்து அறிக்கை விடுத்த ஜனாதிபதி செயலகம் அங்கு பேசப்பட்ட விடயங்கள்குறித்துஎதுவும்விளக்கமளிக்கவில்லை. அந்தச் சந்திப்புக் குறித்த படங்களையும் வெளியிடவில்லை. சுமந்திரனது சந்திப்புக் குறித்து ஜனாதிபதி செயலகம் எந்தவொரு செய்திக் குறிப்பையும்கூட வெளியிடவில்லை. ஆனால், சுமந்திரன் சொல்லாமல் சொல்லிய விடயம், 'பார் பெர்மிட்' விவகாரத்தில், தனக்கு உள்கட்சி விவகாரங்களில் போட்டியாளரான சிறீதரனை குறிவைத்து ஜனாதிபதியிடம் குற்றப்பத்திரிகை சமர்ப்பிப்பதாக இருந்தது.

## அதிரடி சாகசம்

இந்தச் சந்திப்புகளை தொடர்ந்து, தமிழ் அரசு கட்சியின் வேட்பாளர் பட்டியலை முடிவு செய்வதில், சுமந்திரனின் கையே ஓங்கி இருந்தது என்பது தெளிவு. சிறீதரன் அப்போது வாய்மூடி மௌனியான நிலைக்கு தள்ளப்பட்டார் என்றாலும், அவரையே கட்சியின் முதன்மை வேட்பாளர் என்று சுமந்திரன் அறிவித்தது மரியாதை நிமித்தம் அல்ல. மாறாக, சிறீதரனுக்கு உரித்தான கிளிநொச்சி வாக்காளர்களின் ஆதரவை கட்சிக்கு பெற்றுக்கொள்வதற்கான அதிரடி சாகசமே அது.

தொடர்ந்து, யாழ்பாணத்தில் நடந்த தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர்கள் அறிமுகக்கூட்டத்தில் பேசிய சிறீதரன், ஒரு பொறுப்பான முதன்மை வேட்பாளர் என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும் விதமாகக் கருத்துரைத்தார். இந்தத் தேர்தலில், தமிழ் அரசுக் கட்சி குறைந்தது பதினைந்து ஆசனங்களிலாவது வெற்றிபெறும் என்று அவர் கணித்துக் கூறினார். அல்லது, ஜோசியம் கூறினார்.

தற்போதைய களநிலையை வைத்து நோக்கும்போது, தமிழ் அரசுக் கட்சி, அவர் கூறியளவிற்கு ஆசனங்களைப் பெற்றுவிடும் என்று சிறீதரன் உள்ளிட்ட தலைவர்களே நம்புகிறார்கள் என்று தோன்றவில்லை. இன்னும் சொல்லப்போனால், அந்தக் கட்சி, வரலாற்றில் மிகக் குறைந்த ஆசனங்களிலேயே வெற்றிபெறும் என்பதே பொதுவான கணிப்பு. அல்லது எதிர்பார்ப்பு. என்றாலும், கட்சியின் வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் பங்கெடுத்த மக்களின் எண்ணிக்கையை வைத்து நோக்கும்போது, சிறீதரனின் எதிர்பார்ப்பு முற்றிலும் தவறானது என்றும் சொல்லவும் தோன்றவில்லை.

அதற்காகவெல்லாம், அவரது எதிர்பார்ப்பே உண்மையாகிவிடும் என்றும் கூறமுடியாது. இன்னும் சொல்லப்போனால், கடந்த நாடாளுமன்றத்தைவிட, எதிர்வரும் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சி வேட்பாளர்கள் குறைவான எண்ணிக்கையிலேயே வெற்றிபெறுவார்கள் என்றே எண்ணத்தோன்றுகிறது.

## ஒளிந்திருக்கும் உண்மை

தமிழ் அரசு பதினைந்து ஆசனங்களில் வெற்றிபெறும் என்று ஹேஷ்யம் கூறிய சிறீதரன் தனது அரசியலை முடக்குவதற்கு உள்ளடி வேலைகள் செய்யப்படுகின்றன எனவும் அதே பொதுகூட்டத்தில் குற்றச்சாட்டை முன்வைத்தார். அவர் யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை என்றாலும், அவர் யாரைக் குறிப்பிட்டுப் பேசுகிறார் என்பது அனைவரும் உணர்ந்த விடயம்தான்.

சிறீதரனை தொடர்ந்து, கட்சியின் (இடைக்கால) தலைவரான மாவை சேனாதிராசாவும் இதுபோன்ற குற்றச்சாட்டை பொதுவெளியில் முன்வைத்துள்ளார். தான் தலைமைதாங்கிய வேட்பாளர் தேர்வுகுழுவில், தான் முன்வைத்த பெயர்கள் அனைத்துமே நிராகரிக்கப்பட்டதை தொடர்ந்தே, கட்சியின் பரப்புரைகளில் பங்குபெறுவதில்லை என்றும் விளக்கம் அளித்தார்.

சிறீதரனும் சரி, சேனாதிராசாவும் சரி, எது எப்படியானாலும் தாங்கள் தமிழ் அரசு கட்சியைவிட்டு விலகப்போவதில்லை என்பதைத் தெளிவுபடுத்தி உள்ளார்கள். சேனாதிராசாவோ இன்னும் ஒருபடி மேலே போய், தமிழ் அரசு கட்சியை முடக்க சதி நடக்கிறது என்றும், அதனை தான் எதிர்த்து போராடப்போகிறார் எனவும் சூளுரைத்தார். இருவருடைய கூற்றும் வரவேற்கப்பட வேண்டிய விடயம். என்றாலும், அந்த அறிவிப்புகளுக்கு பின் ஒளிந்திருக்கும் உண்மை என்ன என்பது தேர்தலுக்கு பின்னர்தான் தெரியும்.

அதாவது, நாடாளுமன்ற தேர்தலில், தமிழ் அரசு கட்சி கணிசமான ஆசனங்களைப் பெற்றுவிட்டால், சுமந்திரனின் கை ஓங்கிவிட்டது என்று அர்த்தம். அவ்வாறு இல்லை என்றால், கட்சியின் பின்னடைவிற்கு, சுமந்திரனின் தன்னிச்சையாக முடிவு செய்த வேட்பாளர் பட்டியலே காரணம் என்று அவர் மீது பழி போடலாம். அதனைக் காரணம் காட்டி, அவரை கட்சிக்குள் ஓரம் கட்ட முயலலாம். அதில் வெற்றியும் பெறலாம்.

இத்தனை உள்குத்துகளையும் வைத்துக்கொண்டு, தமிழ் அரசுக் கட்சியினர் தேர்தல் மேடைகளில் பேசுவதெல்லாம், தங்களின் உள்வீட்டு பிரச்சினைகள் சார்ந்தே உள்ளது. தங்களில் யார் பெரியவன் என்ற 'ஈகோ' மோதலே அங்கே தொடர்ந்து அரங்கேறி வருகிறது.

இது போதாது என்று, எதிரணியாக சங்கு சின்னத்தில் தற்போது போட்டியிடும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணித் தலைவர்களை வசைபாடுவதிலும் அவர்களது கவனம் இருக்கிறது. இதில் சுமந்திரன் மட்டுமே கவனம் செலுத்துகிறார். தேர்தலுக்குப் பிந்தைய நிலைமையைக் கருத்தில் கொண்டோ என்னவோ, சிறீதரன் சிறிதாவது அரசியல் நாகரீகம் பேணுகிறார். ஆனால், எதிரணியில் உள்ள ஒரு சிலர் தங்களுக்கு வாக்குக் கேட்காமல், சுமந்திரன் தமிழ் அரசுக் கட்சியைத் திருடிவிட்டார் என்று சாரப்படும்படி அரசியல் பேசுகிறார்கள்.

இதற்கிடையில், சேனாதிராசா விசனம் தெரிவித்தது போல, தமிழ் அரசு கட்சிக்கு எதிரான சதியில் பல்வேறு பதவிகளில் உள்ள தலைவர்களையும் எதிர்த்து, கிழக்கில் இருந்து ஓர் 'முன்னாள்' உறுப்பினர் நீதிமன்றத்தை அணுகி உள்ளார். தமிழ் அரசுக் கட்சியில் வேட்பாளராக அவரது கோரிக்கை மனு நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் எதிரணியில் கேட்கிறார்.

இதனால், கட்சி சட்டதிட்டங்களின்படி அவர் 'முன்னாள்' உறுப்பினராகிறார். அவரது வழக்கை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளுமா என்பதே அடிப்படைக் கேள்வி. என்றாலும், இவர் கட்சியில் இருக்கும் போதே, சுமந்திரன் எதிரணியில் இருந்தார் என்பது அப்பட்டமாகத் தெரிகிறது.

## பொருளாதார வளர்ச்சி

இதன் காரணமாகவெல்லாம், தமிழர் தரப்பில் இரண்டாவது அணியாக பலகாலமாக இருந்துவிட்டு, இப்போது மூன்றாவது அணி என்று ஊடகங்களால்

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# தமிழரின் கதியும் விதியும்

4ம் பக்க தொடர்ச்சி...........

மாற்று பெயரிடப்பட்டுள்ள கஜன் பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரஸ் கை ஓங்கி உள்ளதாகச் சிலர் கருதுகின்றனர். உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால், தமிழ் அரசுக் கட்சியைவிட பாரம்பரியம் உள்ள கட்சி, தமிழ் காங்கிரஸ். கஜேந்திரகுமாரின் கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்படுகிறதோ இல்லையோ, அவர் தனது வழியில் தமிழ் தேசியம் குறித்து பிடிப்பாகவே இருக்கிறார் என்ற எண்ணமும் மக்களிடையே தோன்றி வருவதாக ஒரு கருத்து உருவாகி வருகிறது.

இது தவிர, நாடாளுமன்றத் தேர்தலில், வட மாகாணத்தில், அதிலும் குறிப்பாக யாழ்பாண தேர்தல் மாவட்டத்தில், ஜனாதிபதி அனுரவின் கட்சி ஒன்றிரண்டு ஆசனங்களைப் பெற்றுவிடலாம் என்ற கருத்து சமூக வஷ்லைதளங்களிலும் பரவி உள்ளது. இதனால், தமிழ் மக்கள் திடீரென்று அனுர தலைமை மீது நம்பிக்கை வைக்கத் தொடங்கி உள்ளார்கள் என்பது அர்த்தமல்ல. மாறாக, தமிழ் அரசியல் தலைமைகள் மீதான அவர்களது அவநம்பிக்கை அதிகமாகி உள்ளது என்பதே பொருள். ஆனால், அனுரவின் தற்போதைய எதிர்பார்ப்புகளுக்கு உள்வீட்டில் இருந்தே எதிர்ப்பு இருக்கிறது என்பது கண்கூடு.

அரசியல் தீர்வு விடயங்களில், தான் ஜனாதிபதியான பின்னர் அனுர கவனமாகவே கருத்துத் தெரிவிக்கிறார். அல்லது எந்தவொரு கருத்தும் தெரிவிக்கிறார் இல்லை. ஆனால், அவரது ஜேவிபி கட்சியின் பொது செயலாளர் ரில்வின் சில்வா, வட மாகாணத்தவர்களுக்கு பதிமூன்று உள்ளிட்ட அரசியல் தீர்வுகள் தேவையில்லை. மாறாக, அவர்களுக்கு தேவையானதெல்லாம் பொருளாதார வளர்ச்சி மட்டுமே என்று கருத்துத் தெரிவித்துள்ளார். இது அரதபழசான ராஜபக்சக்களின் அணுகுமுறையின் மறுபதிப்பே. இது ஜேவிபி-யின் தமிழர் பகுதி வாய்ப்புகளை இல்லாமலே ஆக்கலாம்.

### குண்டு சட்டிக்குள்...

வெற்றியோ, தோல்வியோ, ஜேவிபி வட மாகாணத்தில் கால் பதிக்கப்போகிறது என்றால், இங்கிருந்து டக்ளஸ் தேவானந்தாவின் ஈபிடிபி கட்சியும் தலைநகர் கொழும்பு மாவட்டத்தில் களம் இறங்குகிறது. அதிலும் குறிப்பாக, இரண்டு பௌத்த பிக்குகள் மற்றும் முஸ்லீம் வேட்பாளர்களும் அந்த கட்சியின் கொழும்பு மாவட்ட பட்டியலில் அடங்குகிறார்கள். ஆனால், தமிழ் அரசு கட்சி உள்ளிட்ட பிற தமிழர் குழுக்கள் இன்னமும் குண்டுச் சட்டிக்குள்ளேயே தொடர்ந்து குதிரை ஓட்டி வருகிறார்கள்.

மற்றபடி, கிளிநொச்சி அடங்கிய யாழ்பாண தேர்தல் மாவட்டத்தில், மொத்தம் உள்ளதே ஆறு ஆசனங்கள்தான். அவற்றிற்காக மொத்தம் நாற்பதுக்கும் அதிகமான அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்கள் சார்பில் நானூறுக்கும் அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். மொத்தமுள்ள ஆறு இலட்சம் வாக்காளர்களில், நான்கில் மூன்று பங்குவரை தேர்தலில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

சமூக வலைதளத்தில் யாரோ பகடியாகக் கூறியதுபோல், போகிற போக்கில், வாக்குசீட்டில் உங்களுடைய பெயரோ, என்னுடைய பெயரோ இடம் பெற்றுள்ளதா என்பதைகூட 'செக்' செய்யவேண்டும். சில சமயம், அந்த பெயர்களில் இருந்து யாராவது தேர்ந்தெடுக்கப்பட்டால் கூட ஆச்சரியப்பட கூடாது!

இதுதான், தேர்தல் அரசியலில் தமிழ் தரப்பினரின் கதி! விதி!

# ஒல்லாந்தர் கால இரண்டு நாணயங்களை விற்க முயன்றவர் ஹட்டனில் கைதானார்

ஹட்டன் பிரதேசத்தில் ஒல்லாந்தர் காலத்து VOC எழுத்து பொறிக்கப்பட்ட கேடயம் மற்றும் இரண்டு நாணயங்களை விற்பனை செய்ய முயன்றவர் சந்தேக நபரொருவர் நேற்று ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்த இந்த கேடயம் மற்றும் இரண்டு நாணயங்களை 20 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்றுள்ளார்.

சந்தேகநபர்கினிகத்தேனைபிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடையவர் ஆவார்.

இந்தக் கேடயம் மற்றும் இரண்டு நாணயங்கள் தனக்கு எவ்வாறு கிடைத்தது என்பதைசந்தேகநபர்இதுவரைகூறவில்லை எனவும், இந்த பொருள்களின் தொல்பொருள் பெறுமதியை அறிந்துகொள்ள இது தொடர்பில் தொல்பொருள்திணைக்களத்துக்குதெரிவிக்கப் பட்டுள்ளதாகவும் ஹற்றன் தலைமை பொலிஸ் பரிசோதகர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நேற்று (வியாழக்கிழமை) ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

விஓசிஎன்பதுஒல்லாந்தர்காலகிழக்கிந்திய கம்பனி எனும் பெயரைக் குறிக்கும் சுருக்கக் குறியீடாவதோடு, இந்நாணயம் 1732ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவந்துள்ளது.(05)

# கெஹலிய ரம்புக்வெல பெயர் நீக்கப்பட்டது




கண்டி , வத்தேகம கல்வி வலயத்திற்கு உட்பட்ட குண்டசாலை பிரதேசத்தில் உள்ள 'கெஹெலிய ரம்புக்வெல்ல ஆரம்ப பாடசாலை' என்ற பாடசாலையின் பெயர் 'குண்டசாலை அரச ஆரம்ப பாடசாலை' என மாற்றப்பட்டுள்ளது.

மத்திய மாகாண ஆளுநர் எஸ்.பி.எஸ். அபயகோன்புதன்கிழமைவிடுத்தஉத்தரவின் கீழ் இந்த பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளின்பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ள பாடசாலைகளில்பெயர்களை மாற்றுமாறு பொதுமக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய மாகாண கல்வி திணைக்களத்தால் இந்தத் தீர்மானம்எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 'கெஹலிய ரம்புக்வெல்ல ஆரம்ப பாடசாலை' என்ற பாடசாலையின்பெயர்தற்போது'குண்டசாலை அரச ஆரம்ப பாடசாலை' என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, அரசியல்வாதிகளின் பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ள மினிபே கல்வி வலயத்திற்கு உட்பட்ட தெல்தெனிய பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளின் பெயர்களையும் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் மூன்றாம் காலாண்டிற்கான நிதி முன்னேற்ற மீளாய்வு

மூன்றாம் காலாண்டிற்கான நிதி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமானது அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் புதன்கிழமை பி. ப 02.30 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன் போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் -

இக்கூட்டத்தின்நோக்கமானதுநிதிமுகாமைத்துவம்மற்றும் கட்டுப்பாடுகள் சரியான முறையில் பின்பற்றப்படுகின்றனவா என்பதனை ஆராய்வதும், நிதி முன்னேற்றங்களை மீளாய்வு செய்வதாகவும் தெரிவித்ததுடன், இவ் மீளாய்வுக் கூட்டத்தில் நிதி முன்னேற்றங்களை ஆராய்ந்தவகையில் திருப்திகரமாகவிருப்பதாகவும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், பிரதம பொறியியலாளர்,



கணக்காளர் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

# மதுபானசாலை அனுமதிகளை ஜேவிபியினரும் பெற்றனரா?

## கீத்நாத் காசிலிங்கம் கேள்வி

மதுபான சாலைக்கான அனுமதிகளை பெற்றவர்களின் பெயர் பட்டியலை இதுவரை வெளியிடாது இருப்பதால், ஜே.வி.பியினரும் மதுபான சாலைகளுக்கான அனுமதிகளை பெற்றுள்ளனரா என நாங்கள் சந்தேகிக்கிறோம் என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் யாழ் தேர்தல் மாவட்ட வேட்பாளர் கீத்நாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் -

பெரமுனகட்சியில்இருந்தபலர்தற்போதுகட்சியில்இல்லை. அவர்கள் கட்சியை விட்டு போய்விட்டார்கள். கட்சியில் இருந்த இனவாதிகள், குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்கள் என எல்லோரும் கட்சியை விட்டு போய்விட்டார்கள். தற்போது பெரமுன தூய கட்சியாக காணப்படுகிறது.

கட்சியில் பல பிரச்சனைகள் இருந்தன. நாம் அவற்றில் இருந்து புதிய பாதையில் பயணிப்போம், தற்போது நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நாமல் ராஜபக்சே கட்சியின் தேசிய அமைப்பாளராக உள்ளார். நாங்கள் அவரின் தலைமையில் பயணிப்போம்.

எமது கட்சி யாழில் பல பின்னடைவுகள் சந்தித்து இருந்தன. இனிவரும் காலங்களில் மக்களோடு மக்களாக இருந்து வேலை செய்வோம். இப்ப உள்ள அரசாங்கம் பல பொய்களை சொல்லி. ஆட்சிக்கு வந்துள்ளார்கள். அதன் உண்மைகளை மக்களுக்கு தெளிவூட்டுவோம்.

தென்னிலங்கையை பொறுத்த வரைக்கும் அரசியலில் 15 தொடக்கம் 30 வருட காலங்கள் இருந்தவர்கள், அரசியலில் ஓய்வு பெற்று விலகி இருக்கிறார்கள். அவர்கள் இளையோருக்கு வழி விட்டுள்ளனர். ஆனால் வடக்கில் யாரும் இளையோருக்கு வழி விட்டுக்கொடுக்க தயார் இல்லை. தென்னிலங்கையில் ஏற்பட்ட மாற்றம் வடக்கிலும் வர வேண்டும்.

கடந்த காலங்களில் என்னை நேரடி அரசியலுக்கு வருமாறு பல்வேறு அழைப்புக்கள் வந்தன. நாமல் தேசிய அமைப்பாளரான பின்னரே நானும் நேரடி அரசியலுக்குள் வந்துள்ளேன்.

13ஆம் திருத்தம் தொடர்பாக நாமல் வெளியிட்ட கருத்து கட்சியின் கருத்து. அதாவது காணி பொலிஸ் அதிகாரம் வழங்க முடியாது என்பது. ஆனால் நான் உள்ளிட்ட பலர் அதனை ஏற்கவில்லை. அதனை அவர்களுக்கு நாங்கள் புரிய வைப்போம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.




ஜேவிபியினர் முன்னர் 13 க்கு எதிராக போராடியவர்கள். பின்னர் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் 13 ஐ முழுமையாக தருவோம் என்றார்கள். இன்று 13ஐ தரவே மாட்டோம் என சொல்கின்றனர்.

அன்று 13ஐ தர முடியாது என கூறிய நாமலை இனவாதிகள் என கூறியவர்கள் இன்று ஜனாதிபதி அநுராவிற்கு என்ன கூற போகிறார்கள்.

அதேபோன்று தேர்தல் காலத்தில் , முன்னைய அரசாங்கத்திடம் மதுபான சாலைக்கான அனுமதிகளை பெற்றுக்கொண்டவர்களின் விபரங்கள் தம் வசம் உண்டு எனவும் அதனை வெளியிடுவோம் என கூறியவர்கள் ஏன் இன்னமும் அதனை வெளியிடவில்லை ?

அவர்கள் பெயர் பட்டியலை வெளியிடாது இருப்பதனை பார்க்கும் போது, மதுபான சாலைக்கான அனுமதிகளை ஜேவிபியினரும் பெற்று இருக்கலாம். என நாம் சந்தேகிக்கிறோம். அல்லது பெரிய டீலை முடித்துள்ளதால் தான் பட்டியலை வெளியிடாது உள்ளனரா எனும் சந்தேகமும் உண்டு.

தேர்தலுக்கு முன்னர் மதுபானசாலைக்கான அனுமதிகளை பெற்றவர்களின் பெயர் விவரங்களை வெளியிட்டு, அவர்களை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

அதேவேளை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் தாம் யாரும் மதுபான சாலைக்கான அனுமதியை பெறவில்லை என சத்திய கடதாசி முடித்து தர சொல்லுகிறோம்.

நான் யாருக்கும் மதுபானசாலைகளை பெற்றுக்கொடுக்கவோ , எனது பெயரில் பெறவோ இல்லை என சத்திய கடதாசி முடித்துள்ளேன். அதனை போல ஏனையவர்களும் சத்திய கடதாசி முடித்து தரட்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சனை பெரியளவிலான பிரச்சினை என்பதனை நாங்களும் ஏற்றுக்கொள்கிறோம். எமது கட்சியின் ஆட்சி காலத்தில் அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தோம். முடியவில்லை.

தற்போதுள்ள அரசாங்கம் அந்த பிரச்சனையை தீர்க்க முயற்சி செய்ய வேண்டும். அதற்கு எமது கட்சியும் நிச்சயம் ஆதரவு வழங்குவோம்.

கடந்த காலங்களில் வடக்கில் நாம் முன்னெடுத்த வேலைத்திட்டங்கள் போதாது என்பதனை ஏற்றுக்கொள்கிறேன். அதனால் தான் நான் இம்முறை வடக்கிற்கு வந்துள்ளேன். மக்களோடு மக்களாக இருந்து அவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்போம்.

நாமல் ராஜபக்சேயும் இனிவரும் காலங்களில் வடக்கிற்கு நேரடியாக விஜயம் செய்து இங்குள்ள மக்களின் பிரச்சனைகளை தீர்த்து வைக்க முயற்சிகளை முன்னெடுப்பார்.

மாதத்தில் ஒன்று , இரண்டு தடவைகள் வருகை தந்து இங்குள்ள மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து அதனை தீர்க்க முயற்சிகளை முன்னெடுப்பார். - என்றார். (05)






# 63,000 சுற்றுலாவிகள் 15 நாள்களில் வருகை

இவ்வருடத்தில் ஒக்ரோபர் மாதத்தின் முதல் 15 நாள்களில் 63,491 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து 18,078 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 4,504 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 4,495 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

மேலும், ஜெர்மனி, ரஷ்யா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதன்படி, ஒக்ரோபர் மாதத்தில் 155,070 சுற்றுலாப் பயணிகள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கைசுற்றுலாஅபிவிருத்திஅதிகாரசபைத்தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 1,548,299 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அவர்களில், 304,634 சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்தும், 140,959 சுற்றுலாப் பயணிகள் ஐக்கிய இராச்சியத்திலிருந்தும், 130,701 சுற்றுலாப் பயணிகள் ரஷ்யாவிலிருந்தும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.(05)

# நீர் நிரம்பிய குழியில் மூழ்கி மாணவன் சாவு

கொடதெனியாவ ஹல்ஒலுவ கந்த பிரதேசத்தில் உள்ள நீர் நிரம்பிய குழியில் மூழ்கி மாணவன் ஒருவன் புதன்கிழமை உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வராதல, கொட்டதெனியாவ பிரதேசத்தில் வசிக்கும் 14 வயதுடைய பாடசாலை மாணவனே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

உயிரிழந்த மாணவன் தனது 05 நண்பர்களுடன் இணைந்து புதன்கிழமை மாலை நீர் நிரம்பிய குழியில் நீராடச் சென்றுள்ளார்.

இதன்போது, மாணவன் திடீரென நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடதெனியாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தேசிய மக்கள் சக்தியினர் நுவரெலியாவில் கலந்தாய்வு



தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலானது புதன்கிழமை மாலை நுவரெலியா பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் புதிய வேட்பாளர்களை அறிமுகப்படுத்தியதோடு ஆட்சி, அதிகார நிலைவரம் தொடர்பாகவும் எமது எதிர்கால செயற்பாடுகள் பற்றியும் , முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கு நாம் அனைவரும் எவ்வாறு இணைந்து செயற்படலாம் என்பது பற்றியும் கலந்துரையாடல் செய்தனர் ,

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களுக்கு ஏன் வாக்களிக்க வேண்டுமென வருகை தந்த பொது மக்களுக்கும் தெளிவுபடுத்தினர் அத்துடன் எமது பயணத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வருமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக்கலந்துரையாடலில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஏராளமான பொது மக்கள் , வர்த்தகர்கள் , சமூக ஆர்வலர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள் பலரும் இதன்போது பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் இடதுகரை விநியோக வாய்க்கால் சீரமைப்பு பணி ஆரம்பம்



கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் இடது கரை நீர் விநியோக வாய்க்கால் சீரமைப்பு பணிகள் 35 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.


கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர் பாசன குளமான இரணைமடு குளத்தின் முரசுமோட்டை ஊரியான் உருத்திரபுரம் பெரிய பரந்தன் ஆகிய பிரதேசங்களுக்கான இடது கரை நீர் விநியோக வாய்க்காலின் நீர் திறந்து விடப்படும் துலுசுப் பகுதியல் ஏற்பட்டிருந்த நீர்க்கசிவினைத் தடுக்கும் வகையிலான சீரமைப்பு பணிகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் கட்டுமான பணிகள் மாகாண நீர்ப்பாசன திணைக் களத்தின் 35 மில்லியன் ரூபாய் செலவில் முன் னெடுக்கப்பட்டு வருவதாக நீர்பாசனபொறியியலாளர் பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

கடந்த சிறுபோக செய்கை அறுவடையின் பின்னர் குளத்தினுடைய குறித்த புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

கிளிநொச்சி திருவையாறு ஏற்று நீர் பாசன திட்டத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் ஏனைய நீர் விநியோக நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் குறித்த புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட் டுவருகின்றன.

இதன் புனரமைப்பு பணிகள் எதிர் வரும் இரண்டு வாரங்களுக்குள் நிறைவுறுத் தப்பட உள்ளதாகவும் நீர் பாசனத் திணைக் களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)




# மின்சாரத்தை பாய்ச்சி கொலைசெய்த நபருக்கு தூக்குத் தண்டனை விதிப்பு

காலி, இமதுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொரடுஹேனகொட பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைசம்பவத்துடன் தொடர்புடைய நபருக்கு காலி மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

இந்த கொலை சம்பவம் கடந்த 2000 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டவர் சட்டவிரோத மின்சாரகம்பிகளைப் பயன்படுத்தி மின்சாரத்தை பாய்ச்சி நபரொருவரை கொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சந்தேக நபருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதால் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

காலி, இமதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய நபரொருவருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

(05)

# அடையாளம் தெரியாத பெண்ணின் சடலம் நுவரெலியாவில் மீட்கப்பட்டது

நுவரெலியா பிரதான பஸ் தரிப்பிடத்தில் இருந்து அடையாளம் தெரியாத பெண்ணின் சடலம் ஒன்று வியாழக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் நிலையத்தினுள் ஒருவர் இறந்து தரையில் கிடப்பதாக நுவரெலியா மாநகர சபை ஊழியர் ஒருவர் பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபருடன் இன்னுமொரு பெண்ணும் கடந்த 5 நாள்களுக்கு முன்பிலிருந்து நுவரெலியா பஸ் தரிப்பிடத்தில் யாசகம் பெற்று வந்ததாக தகவல் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் அதிக குளிர் காரணமாக இவர் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்நிலையில், சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(05)

# தேர்தல் கண்காணிப்பிற்கான உபகரணங்கள் கையளிப்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற உள்நாட்டுப் பங்குதாரர்களுக்கு உபகரணங்களைக் கையளிக்கும் நிகழ்வு புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல்கள் கண்காணிப்புக் குழுவின் தலைவர் கார்மன் மொரீனோ உட்பட பலர் இதில் பங்கேற்றனர்.(05)



## 3045....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்த 620 முறைப்பாடுகள் இலஞ்ச ஊழல் சட்டத்திற்கு புறம்பான வகையில் அமைந்துள்ளதால் அவை சம்பவந்தப்பட்ட நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

## ரில்வின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்விப்படவில்லை. அவ்வாறான ஒரு கருத்தை ரில்வின் சில்வா சொல்லியிருப்பார் என்று நான் நினைக்கவில்லை.

உண்மையில் நாம் ஓர் அரசியல் கட்சி என்றவகையில்வட-கிழக்குமற்றும்மலையக

தமிழ் மக்களுக்கு அரசியல் கலாசார பிரச்சினைகள், அசாதாரணசூழல்இந்தநாட்டில் ஏற்பட்டதென்று ஏற்றுக்கொள்கின்றோம். இலங்கையில் தேசிய ஒற்றுமை இல்லை என்ற பிரச்சனை உண்டு. ஆனால், கடந்த காலங்களில் நாம் சொன்னோம் எனப்

பெரும் பொய்களைச் சொன்னார்கள். முஸ்லிம்கள் தாடி வளர்க்க முடியாது. பள்ளி செல்லமுடியாது என்றெல்லாம் சொன்னார்கள். நான் நினைக்கிறேன் இந்த கருத்தும் அவ்வாறான ஒன்றாக இருந்திருக்கும் என்று. இலங்கையில் அனைவருக்கும் சமமான உரிமை உண்டு என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அது எமது கொள்கைகளிலும் ஒன்று. அடுத்து அனைவருக்குமான நீதி சமமானதாக இருக்க வேண்டும். புத்தகத்தில் மாத்திரம் அல்ல செயற்பாட்டிலும் அது இருக்கவேண்டும்.

தமிழ், முஸ்லிம் மக்களின் கலாச்சார உரிமைகள்ஒழுங்காகபாதுகாக்கப்படவில்லை. அதை ஏற்றுக்கொள்கின்றோம். அதனை பாதுகாப்பதற்காகவே 13ஆவது திருத்தம் இந்தியாவால் கொண்டு வரப்பட்டது. ஆனால் அதனால் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால் தமிழ், முஸ்லிம் மக்கள் நினைக்கின்றார்கள் அந்த சீர்சிருத்தம் மாத்திரம் இருந்தால் போதும் என்று.

ஆனால், நாங்கள் புதிய ஒரு அரசியல் யாப்பினை கொண்டுவருவோம். அதனூடாக அனைவரது உரிமைகளும் பாதுகாக்கப்படும். அதுவரைக்கும் மாகாணசபை முறைமையை பாதுகாப்போம். அந்த தேர்தலும் நடத்தப்படும்.

இன்னும் ஒரு வருடத்திற்குள் மிகச்சிறந்த விவாதங்களுக்கு பின்னர் பலரதுஆலோசனைகளைப் பெற்று சரியான ஒரு அரசமைப்பு முறையினை இந்த நாட்டில் உருவாக்குவோம். அத்துடன் காணாமல் ஆக்கப்பட்ட லலித், குகன் மற்றும் திருகோணமலையில் காணாமல் ஆக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பாக தற்போதே விசாரணைகளை ஆரம்பித்து விட்டோம். தராக்கி சிவராம் அவர்களுடைய விசாரணை

ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாங்கள் ஆட்சிக்கு வந்து 3 வாரங்களே ஆகின்றன. எனினும் இதற்கான விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம். அத்துடன் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள் என ஜனாதிபதி ஏற்கனவே தெரிவித்துள்ளார் என்றார்.

(100)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் சிறந்த நிர்வாகத்துக்கான வலுவான அமெரிக்க அர்ப்பணிப்பு குறித்து இருவரும் கலந்துரையடினர்.

சமாதானம், உறுதிப்பாடு மற்றும் பகிரப்பட்ட பாதுகாப்பு நலன்களை மேம்படுத்துவதற்காக அமெரிக்க -இலங்கை கூட்டுறவை வலுப்படுத்துவது தொடர்பாகவும் இலங்கையின் கடல்சார் கள விழிப்புணர்வை ஆதரிப்பதற்காக கரையோரக் கண்காணிப்பு (யளளஉஜ உஷழிகூ௴மி லுஷ்ஜஆ புஷ்ஷ 360 சியூ) விமானத்தின் பரிமாற்றத்துடன் இந்த கூட்டாண்மை செயல்படுவதைக் கண்டு பெருமிதமடைவதாகவும் அமெரிக்க தூதுவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## உயிர்த்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதி வழங்கப்பட வேண்டும் என கத்தோலிக்க திருச்சபையும் கத்தோலிக்க மக்களும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இது நாடகம் அல்ல. கத்தோலிக்க மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவை நம்புகின்றனர். அந்த நம்பிக்கையை அவர் பாதுகாக்கவேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டைப் பொறுப்பேற்றபோது அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை இருந்தது. ஆனால், அவர் பதவியேற்ற பின்னர், அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டது. நல்லாட்சியின்போதும் சம்பளம் அதிகரிக்கப்பட்டது.

ஊதிய முரண்பாடுகளைக் களைய குழுக்கள் நியமிக்கப்பட்டன. பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதால் அடுத்த வருடம் முதல் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சம்பளத்தை அதிகரிக்கவுள்ளதாக முன்னர் மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்தது. ஆனால் தற்போது தாம் சம்பள அதிகரிப்பை வழங்குவதாகக் கூறவில்லை என்று அவர்கள் மறுக்கின்றனர்.

சுமார் 80 சதவீத அரச ஊழியர்கள் தேசிய மக்கள் சக்திக்கே வாக்களித்தனர். எனவே அவர்களை இந்த ஆட்சி ஏமாற்றக்கூடாது என்றார்.

## வேட்பாளர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்களையும் ஒன்று சேர்ப்பதற்கும் அதனை சமூகத்தில் முன்வைப்பதற்குமாக இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக ரோஹண தெரிவித்தார்.

அதற்கமைய வேட்பாளர்கள் தம்மைப் பற்றியும் தமது விருப்பு இலக்கம் தொடர்பிலும் நாடாளுமன்ற தேர்தலில் தாம் போட்டியிடுவதற்கான நோக்கம் தொடர்பிலும் மக்களை தெளிவுபடுத்தும் வாய்ப்பு கிடைக்கப்பெறும் என அவர் கூறினார்.

வாக்காளர்கள் தமது வாக்குகளை பயன்படுத்துவதற்கு முன்னதாக தமது வேட்பாளர்கள் தொடர்பான அடிப்படை தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான ஒரு நடைமுறையாக இந்த வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# தமிழ்த் தேசியத்திற்கு புத்துயிர் ஊட்டுவோம்

## கிருஸ்ணமீனன் தெரிவிப்பு

சிதைவடைந்துள்ள தமிழ் தேசிய அரசியலுக்கு புத்துயிர் ஊட்டி எமது உரிமை போராட்டத்திற்கு வலு சேர்க்கும் முகமாகவே நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் நாங்கள் தமிழ் இளையோர் கூட்டமைப்பாக சுயேச்சை குழு 13 இல் கரும்பலகை சின்னத்தில் போட்டியிடுகின்றோம் என கி.கிருஸ்ணமீனன் தெரிவித்துள்ளார்.

யாழ் . ஊடக அமையத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

சிதைவடைந்துள்ள தமிழ் தேசிய அரசியலையும், அரசியலில் மக்களுடைய நம்பிக்கையீனத்தை போக்கியும், தமிழ் தேச அரசியலுக்கு புத்துயிர் ஊட்டி , மீள எமது உரிமை போராட்டத்திற்கு வலு சேர்க்கவே நாங்கள் இந்த தேர்தலில் இளையோரை ஒருங்கிணைத்து போட்டியிடுகிறோம் என தெரிவித்தார்.

அதேவேளை அவர்களின் கொள்கை பிரகடனமும் நேற்று வெளியிடப்பட்டது.

அ. ஈழத் தமிழ் மக்களாகிய நாம் பேரினவாத சிங்கள அரசியல்தலைவர்களாலும் இனவாதசெயற்பாட்டாளர்களாலும் அன்று முதல் தற்போது வரை எதிர்நோக்கும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு, ஒடுக்கு முறைகள், அச்சுறுத்தல், காணாமல் ஆக்கப்படுதல், நில ஆக்கிரமிப்பு, தாயக நிலப்பரப்பில் பௌத்த விகாரைகளை நிறுவுதல், தமிழர் தம் கலை கலாசார பண்பாடுகளை சிதைத்தல், வளச்சுரண்டல் போன்ற பல்வேறு இனவாத மனித உரிமை மீறல் செயற்பாடுகளுக்கு தீர்வுகாணல்.

01. இவ்வாறான இனவாத செயற்பாடுகள் அனைத்தையும் இனம் கண்டு முறையாக ஆவணப்படுத்தல்.

02. இவற்றிற்கு எதிராக சட்டங்களை முறையாக கையால்தலும், மக்கள் எதிர்நோக்கும் இவ்வாறான பிரச்சினைகளை சரியான முறையில் பாராளுமன்றில் வெளிக்கொண்டுவருதலும்.

03. இவற்றிற்கு எதிராக மக்கள் மயப்படுத்தப்பட்ட பல்வேறு விதமான எதிர்ப்பு நடவடிக்கைகளை முழுமூச்சுடன் முன்னெடுத்தல்.

04. முறையான வெளியுறவுக் கொள்கைகள் மூலம் இனவாதசெயற்பாடுகளுக்குஎதிராகஇலங்கைஅரசாங்கத்திற்கு அழுத்தம் ஏற்படுத்தலும் தீர்வு காணலும்.

ஆ. இலங்கையில் இனவாத செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து தெற்கு அரசியலால் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இன அழிப்பு மற்றும் ஒடுக்கு முறைகளுக்கு சர்வதேச பொறிமுறைகளின் ஊடாக தீர்வினை பெற்றுக்கொள்ளுதலும் மீள் இவ்வாறான இன அழிப்பு மற்றும் ஒடுக்கு முறைகள் பேரினவாத சிங்கள செயற்பாட்டாளர்களால் தமிழ் மக்கள் மீது ஏற்படாமையை உறுதி செய்தலும்.

01. இலங்கையில் இனவாத செயற்பாடுகள் ஆரம்பமான காலம் தொடக்கம் இன்று வரை பேரினவாத சிங்கள செயற்பாட்டாளர்களால் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல் செயற்பாடுகளை முறையான ஆவணப்படுத்தல்.

02. 2009 ஆம் ஆண்டு வன்னி பிராந்தியத்தில் சிங்கள பேரினவாதஅரசியல்தலைமைகளால்அரசகட்டமைப்புகளைக் கொண்டு நிகழ்த்திய மனித உரிமை மீறல் செயல்பாடுகளை சிறப்பு ஆவணப்படுத்தல்.

03. 2009 ஆம் ஆண்டு போர் நடைபெற்ற காலம் தொடக்கம் இன்று வரை தமிழர் பிரதேசங்களில் நிகழ்ந்த மற்றும்நிகழ்ந்து கொண்டிருக்கும்அரச பொறிமுறைகளுடான இன அழிப்பு மற்றும் அத்துமீறல் செயல்பாடுகளை முறையான ஆவணப்படுத்தலும் இவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளில் உடனடியாக செயல்படுதலும்.

04. சர்வதேசரீதியில் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான பொறிமுறைகளின் ஊடாக முறையான வெளியுறவு கொள்கைகளை பாவித்து குற்றம் நிகழ்த்திய அவர்களுக்கு தண்டனைகளைபெறுவதுடன்எமக்கானநிவாரணங்களையும் பெற்றுக்கொள்ளுதலும், மீள இவ்வாறான இன அழிப்பு மற்றும் ஒடுக்கு முறைகள் நிகழாமையை உறுதி செய்தலும்.

இ. எதிர்கால அரசியல் செயற்பாடுகள்.

01. மக்கள் ஆணையுடனான எமது வெற்றியை தொடர்ந்து தமிழ் மக்கள் கூட்டமைப்பானது அரசியல் கட்சியாக ஜனநாயக ரீதியிலே பதிவு செய்யப்படுவதோடு நாம் ஓர் மக்கள் இயக்கமாக கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி எமது பயணம் என்றும் சரியான பாதையிலே சென்றடையத்தக்க யாப்பு ஒன்றினை எமது நோக்கத்திற்காக புத்திஜீவிகள், பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள், சிவில் பொது அமைப்புகள், மதக்கட்டமைப்புகள் மற்றும் புலம்பெயர் தேசத்தவர்களின் ஆலோசனைகளை உள்வாங்கி உருவாக்கிக் கொள்வோம்.

02. தொடர்ச்சியாக எமது கட்டமைப்பு ரீதியான ஜனநாயக அரசியல் இயக்கத்தின் நோக்கங்களை சரியாக விளங்கிக் கொண்டு எமது செயற்பாடுகளுடன் சேர்ந்து தமிழ் மக்கள் கூட்டமைப்பாக பயணிக்க வரும் தலைவர்களையும் அனைத்து செயற்பாட்டாளர்களையும் முறையாக ஆராய்ந்து பரிசீலனைப்படுத்தி அவர்களை எமது மக்கள் இயக்கத்தின் அங்கத்தவர்களாக சேர்ப்பதோடு எமது தமிழ் மக்கள் கூட்டமைப்பானது முறையான கட்டமைப்பு ஒன்றினை வடக்கு கிழக்கு முழுவதையும் உள்வாங்கி கட்டமைக்கப்படும்.

03. தாயகத்திலே பிறக்கின்ற எமது தமிழ் மக்கள் கூட்டமைப்பானது புலம்பெயர் தேசத்திலே பல ஏக்கங்களுடன் வாழ்ந்து வருகின்ற எமது தாய்மண் உறவுகளில் இருந்தும் எம்மோடு சேர்ந்து பயணிக்க விரும்புகின்ற செயற்பாட்டாளர்களை முறையாக ஆராய்ந்து பரிசீலனை செய்து எமது மக்கள் இயக்கத்தில் உள்வாங்கி தாயகத்திலும் புலத்திலும் முறையாக தமிழ் மக்கள் கூட்டமைப்பினை கட்டமைத்தல்.

04. முறையாக கட்டமைக்கப்பட்ட எமது தமிழ் மக்கள் கூட்டமைப்பு இயக்கத்திற்கு ஊடாக சிறந்த தன்னிறைவு பொருளாதாரக் கொள்கைகள் உருவாக்கப்படுவதோடு சுய தொழில் முனைவோர்களின் கைகளை வலுவடையச் செய்வதன் மூலமாகவும் பல புதிய விவசாய, வியாபார, கைத்தொழில், மீன்பிடி மற்றும் ஏற்றுமதி உற்பத்தி வாய்ப்புகளை ஏற்படுத்துவதுடன் எமது இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புகளை அதிகரித்தல்.

05. பல்வேறு மக்கள் நலச்செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

கல்வி, விளையாட்டு மற்றும் திறன் அபிவிருத்தி செயல்திட்டங்கள்.

பாரம்பரிய மருத்துவத்தினை அபிவிருத்தி செய்தலும்,




நவீன மயப்படுத்தப்பட்ட சுகாதார நலத்திட்டங்களும்.

எமது தேச வளங்களை சரியான திட்டமிடல்களுடன் பயன்படுத்தலும் பாதுகாத்தலும்.

நவீன மயப்படுத்தப்பட்ட முறையான கலாச்சார பண்பாடும் பாரம்பரியங்களை பாதுகாத்தலும்.

முறையான ஆரோக்கியமான பொழுதுபோக்கு அம்சங்கள். கடந்த கால மற்றும் நிகழ்கால அனைத்து செயற்பாடுகளிலும் முறையான ஆவணப்படுத்தலும் எதிர்கால திட்டமிடலும்.

குறிப்பிட்டவாறு பல்வேறுபட்ட மக்கள் நலத்திட்டங்களுக்கு ஊடாக அனைத்து தமிழ் மக்களையும் தமிழ் மக்கள் கூட்டமைப்பினுள் வழிப்படுத்தி உள்வாங்கி வடக்கு கிழக்கு முழுவதிலும் வாழ்கின்ற மக்களுக்கு தன்னிறைவான வாழ்க்கை முறையினை ஏற்படுத்துதல்.

06. எமது முறையான கட்டமைப்பின் ஊடாக வடகிழக்கில் ஏற்படுகின்ற மாற்றங்களை தெற்கு அரசியலால் கையாள முடியாத சூழலை உருவாக்குவதன் ஊடாக தமிழ் மக்கள் அபிலாசைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த தேசியம் என்பன அங்கீகரிக்கச் செய்தல்.

07. ஜனநாயகரீதியிலே சிறந்த அபிவிருத்தியுடன் கூடிய நிறைவான நிலையான வாழ்க்கை முறையினை எமது ஈழத்தமிழ் மக்களுக்கு உருவாக்குவதுடன் பூலோக அரசியல் நகர்வுகளையும் பூலோக நலன்களையும் கருத்தில் கொண்டு புதிய நலத் திட்டங்களையும் உருவாக்கி சிறப்புற தமிழ் மக்கள் கூட்டமைப்பு முற்றுமுழுதாக ஓர் மக்கள் நலன் சார்ந்த அமைப்பாக இயங்குதல். இதற்காக தமிழ் மக்களின் விடுதலைக்காக குரல் கொடுக்கும் எந்த சந்தர்ப்பத்திலும் விலை போகாத சோரம் போகாத அனைத்து தரப்பினரையும் ஒருங்கிணைத்து தொடர்ந்து இடம்பெற்று வரும் திட்டமிட்ட இனவழிப்பு தொடராத வகையில் குறைந்த பட்சம் சமஸ்டி அடிப்படையிலான நிரந்தர அரசியல் தீர்வின் மூலம் இழந்த இறையாண்மையை மீளப்பெறத் தேவையான நகர்வுகளை முன்னெடுப்போம்.

அவ்வாறு நாம் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு தென்னிலங்கை அரச தரப்புக்கள் சிங்கள பௌத்த மேலாதிக்க சக்திகள் இணங்காத பட்சத்தில்.! தமிழ் மக்களின் தலைவிதியை தமிழ் மக்களே தீர்மானிக்கும் வண்ணம் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பை நோக்கிய ஜனநாயக வழிமுறையை பின்பற்றி நிரந்தர அரசியல் தீர்வை பெற நிலத்திலும் புலத்திலும் உள்ள அனைத்து தமிழர் தரப்பையும் ஒருங்கிணைத்து செயலாற்றுவோம் என தமிழ் இளையோர் ஆகிய நாம் உறுதிபூண்டுள்ளோம் என அவர்களின் கொள்கை பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)



# எனது அமைச்சரவை அமைச்சர் ஒருவரின் கணவர் பல மில்லியன் டொலர் லஞ்சம் வழங்க முயன்றார்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

எனது அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சராக பதவிவகித்த பெண் ஒருவரின் கணவர் எனக்கு பல மில்லியன் டொலர்களை இலஞ்சமாக வழங்க முன்வந்தார் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

வர்த்தகர் ஒருவர் கேள்விப்பத்திரத்தை பெற விரும்பினால் அவர் ஒரு மில்லியன் டொலருடன் எங்களிடம் வருவார்.இந்த கேள்விப்பத்திரத்தை எனக்கு தாருங்கள் என வேண்டுகோள் விடுப்பார்.

இது எனக்கு நடந்துள்ளது.நான் பிரதமராக விருந்தவேளை எனது அலுவலகத்திற்கு ஐந்து மில்லியன் டொலர்களுடன் வந்தார்கள்.அதனை எடுத்துக்கொண்டு உடனடியாக வெளியே செல்லுங்கள். - என்றேன்

எனது அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சரான பெண்ணொருவரின் கணவரே அவ்வாறு பெருந்தொகை பணத்துடன் வந்தார்.

உடனடியாக அதனை எடுத்துக்கொண்டு வெளியே போகாவிட்டால் நான் உங்களை கைதுசெய்வேன் என எச்சரித்தேன்.

அந்த நபருடன் சிங்கப்பூரை சேர்ந்த வர்த்தகர் ஒருவரும் வந்திருந்தார்.

இளவயதிலிருந்து விழுமியங்களை கற்றுக்கொடுப்பதற்கு முயலவேண்டும்,ஊழலிற்கு பழகிப்போனவர்களின் மனதை மாற்றுவது கடினம்.

உங்களால் திருடமுடிந்த அளவிற்கு திருடுங்கள் ஆனால் பிடிபடாதீர்கள் என தெரிவிக்கும் ஜனாதிபதியொருவரும் இருந்தார். அவர் இதனை தனது அமைச்சரவைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கும், தனது கட்சிக்காரர்களிற்கும் தெரிவித்துள்ளார்.

அனைவரும் திருடினார்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை.இந்த அமைப்புமுறையே நாட்டை சீரழித்தது. அரசாங்கத்தின் திட்டங்களை பெற்றுக்கொள்வதற்காக வர்த்தகர்கள் இலஞ்சம் வழங்க முன்வருவார்கள்,பரந்துபட்ட ஊழல் நாட்டை இறுதியில் வங்குரோத்து நிலைக்கு இட்டுச்செல்லும். - என்றார்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir




# நல்லூர் ஆலயத்தின் சிறப்பு



நல்லூர் கந்தசுவாமி கோயில் இலங்கையில் மிகவும் புகழ் பெற்ற இந்துக் கோயில்களுள் முக்கியமானது. இது இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில், யாழ்ப்பாண நகரத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவிலுள்ள நல்லூர் என்ற இடத்தில் அமைந்துள்ளது. 12 தொடக்கம் 17ம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இருந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக இருந்தது. யாழ்ப்பாண அரசு காலத்தில் மிகவும் முக்கியமான ஒரு கோயிலாக நல்லூர் சந்தசுவாமி கோயில் இருந்ததாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதலாவது அரசனாக கூழங்கைச் சக்கரவர்த்தியின் அமைச்சர் ஒருவரான புவனேகபாகு என்பவரால் இக்கோயில் கட்டுவிக்கப்பட்டதெனயாழ்ப்பாணவைபவமாலைகூறுகின்றது. இதற்கு ஆதாரம் பின்வரும் தனிப்பாடல் 16ம் அல்லது 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் கைலாயமாலை என்னும் நூலின் இறுதியில் காணப்படுகிறது. ''இலக்கிய சகாத்தமெண்ணூற்றெழுவதாமாண்ட தெல்லையவர்பொலி மாலை மார்பனாம் புவனேகபாகு நலமிகுந்திடு யாழ்ப்பாண நகரிகட்டுவித்து நல்லைக் குலவிய கந்தவேட்குக் கோயிலும் புரிவித்தானே'' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் தற்போதுள்ள நல்லூர் கந்தசுவாமி கோயில் 15ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய 17 ஆண்டுகள் ஆண்ட கோட்டை அரசின் பிரதிநிதியான, பிற்காலத்தில் சிறீசங்கபோதி என்னும் பட்டத்தைக் கொண்ட கோட்டை அரசனான, செண்பகப்பெருமாள் என்பவரால் கட்டப்பட்டதாகும். இதற்கு ஆதாரமாக நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் இன்றும் கூறப்பட்டுவரும் கட்டியத்தை இவர்கள் காட்டுகிறார்கள். சமஸ்கிரதத்தில் உள்ள இக்கட்டியத்தின் பகுதி பின்வருமாறு உள்ளது 'சிறீமான் மஹாராஜாதிராஜாய அகண்ட பூமண்டலப்ரதிபதி கந்தரவிஸ்பாத்த கீர்த்தி சிறீ கஜவல்லி மஹாவல்லி சமேத சுப்ரமண்ய பாதாரவிந்த ஜனாதிரூட சோசட மஹாதான சிவகோத்திரோற்பவ இரகுநாத மாப்பாணர் சமுக' திருவருள் பொருத்திய தெய்வயானையுடனும், வள்ளியம்மனுடனும் சேர்ந்திருக்கின்ற முருகனின் திருவடிகளை வணங்குபவனும், மன்னரும் மிகுந்த செல்வங்களுடையவனும், இப்பரந்த பூமண்டலத்தில் எல்லாத் திசைகளிலும் புகழப்படுபவனும், மக்கள் தலைவனும், பதினாறு பெருந்தானங்களைச் செய்பவனுக்குரிய குலத்தில் உதித்தவனுமாகிய சிறீசங்கபோதி புவனேகபாகு என்பது இதன் பொருள்.

முன்னரே சிறியதாக இருந்த கோயிலைத் தனது ஆட்சிக்காலத்தில் புவனேகபாகு பெருப்பித்துக் கட்டியிருக்கக்கூடும் என்பதே பொருத்தம் என்பது வேறு சிலர் கருத்து. உண்மையில் நல்லூர் இப்போது உள்ள அமைப்பானது மூன்றாவது கோயில் கட்டுமானம் ஆகும். இந்த மூன்றாவது கோயில் அமைப்பில் அதுவரை இருந்த பழைய ஆலயத்தின் எந்த கட்டுமானங்களும் சம்பந்தப்படாத புதிய கட்டுமானம்தான் இப்போதுள்ள நல்லூர்க்கந்தன் ஆலயம் ஆகும். யாழ்ப்பாண அரசின் இறுதிக்காலத்தில் நல்லூரிலிருந்த மிகப்பெரிய கோயில் இதுவேயென்பது போர்த்துக்கீசருடைய குறிப்புக்களிலிருந்தும் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கீச தளபதியான பிலிப்பே டி ஒலிவேரா, 1620இல் அரசின் தலைநகரத்தை யாழ்ப்பாணத்துக்கு மாற்றியபோது நல்லூர்க் கோயிலை இடித்துத் தரைமட்டமாக்கும்படி உத்தரவிட்டான். இதிலிருந்து பெறப்பட்ட கற்கள் யாழ்ப்பாணத்தில் புதிய கோட்டை கட்டுவதற்குப் பயன்பட்டதாகத் தெரிகின்றது. இது இருந்த இடத்தில் போர்த்துக்கீசர் சிறிய கத்தோலிக்க தேவாலயமொன்றை கட்டினார்கள். ஒல்லாந்தர் இதனைத் தாங்கள் சார்ந்த புரட்டஸ்தாந்த கிறிஸ்தவ தேவாலயமாக மாற்றினார்கள். இன்றும் இவ்விடத்தில் பிற்காலத்தில் பெரிதாகத் திருத்தியமைக்கப்பட்ட கிறிஸ்தவ தேவாலயமாகக் காணப்படுகின்றது.

ஒல்லாந்த ஆட்சிக்காலத்தில் (1658 - 1798) இறுதி ஆண்டுகளில் இந்துக் கோயில்கள் அமைப்பது தொடர்பாக ஆட்சியாளர்களின் இறுக்கம் ஓரளவு தளர்ந்தபோது, நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மீள அமைக்கப்பட்டது. முன்னைய இடத்தில் கிறிஸ்தவ தேவாலயம் இருந்தபடியால் இன்னொரு இடத்தில் கோயிலை அமைத்தார்கள். மடாலயம் போல் காட்சியளித்துக் கொண்டிருந்த இவ்வாலயத்தை, ஆகமம் சார்ந்த கிரியை முறைக்கும், சிற்ப சாத்திர விதிக்கமைந்த கட்டட முறைக்கும் மாற்றியமைத்து, இன்றைய நிலைக்குக் கொண்டுவர வித்திட்டவர் ஆறுமுகநாவலர் ஆவார்.

இவ்வாலயத்தின் கர்ப்பகிரகத்தில் விக்கிரகத்திற்குப் பதிலாக வேல் அமைக்கப்பட்டுள்ளது. இதனைச் சுற்றி பிள்ளையார் முதலான பரிவாரத் தெய்வங்கள் அமைக்கப்பட்டுள்ளன.. இவ்வாலயம் கிழக்கிலும், தெற்கிலும் வாசல்களைக் கொண்டுள்ளது. இவற்றின் மேல் பெருங்கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வடக்கிலும் இப்போது உயரமான கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் தெற்குப்புறத்தில் உள்ள தீர்த்தக்கேணி நன்கு திட்டமிடப்பட்டு, படிக்கட்டுகளும் மண்டபங்களும் கொண்டதாய் அமைக்கப்பட்டுள்ளது. முருகனின் மூர்த்தங்களில் ஒன்றான தண்டாயுதபாணிக்கு அங்கு சிறு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் நான்கு பக்கங்களிலும் மடாலயங்கள் உள்ளன.

இவ்வாலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகள் காலந்தவறாது நடைபெறுகின்றன. தினமும் அதிகாலை 4.30 மணிக்கு திருப்பள்ளியெழுச்சி பூசை இடம்பெறுகின்றது. மாலையில் பள்ளியறைப்பூசை இடம்பெறுகின்றமையும் இந்த ஆலயத்தின் சிறப்புக்களில் ஒன்றாகும். திருவிழா காலங்களில் மட்டுமல்லாமல் தினமும் மாலையில் முருகப்பெருமானை ஊஞ்சற்பாட்டுப்பாடி, அழகிய சிறு மஞ்சத்தில் எற்றி பள்ளியறையில் துயில் கொள்ளச் செய்வதும், மறுநாள் அதிகாலையில் திருநல்லூர்த் திருப்பள்ளியெழுச்சி பாடி முருகனைத் துயிலெழுப்பி அதே சிறு மஞ்சத்தில் அழைத்து வந்து மூலஸ்தானத்தில் அமர்த்துவதும் சிறப்பான மரபாகும்.

இங்கு ஆவணி அமாவாசையைத் தீர்த்தமாகக் கொண்டு இருபத்தைத்து நாட்களுக்கு மகோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. ஆடி அமாவாசையின் 6ஆம் நாள் கொடியேற்றத் திருவிழாவுடன் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகிறது. மகோற்சவ காலங்களில் மெய்யடியார்கள் காவடியாட்டம், காவடி எடுத்தல், தீச்சட்டியெடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல், அடியளத்தல் முதலான நேர்த்திகளை நிறைவேற்றுவர். இக்காலத்தில் புராண படனம் செய்தல், சமயப் பிரசங்கம் செய்தல், திருமுறைகள் ஓதுவித்தல் முதலான சமய நிகழ்ச்சிகள் மக்களின் ஆன்மீக மேம்பாட்டிற்காக நடாத்தப்படுகின்றன.

இவ்வாலயத்தைப் பற்றி குறிப்பிடுகின்ற நூல்களாக கூழங்கைத் தம்பிரான் பாடிய நல்லைக்கவி வெண்பா, இருபாலைச் சேனாதிராச முதலியாரின் நல்லை வெண்பா, நல்லையந்தாதி, நல்லை நகர்க் கந்தன் பேரில் திருவூஞ்சல், திருநல்லூர்த் திருப்பள்ளியெழுச்சி, உடுப்பிட்டி சிவசம்புப் புலவரின் நல்லைகந்தசுவாமி விஞ்சதி, நல்லை வேலவரவா, ஆறுமுக நாவலரின் தனி நிலைச் செய்யுள் ஒன்று ஆகியன காணப்படுகின்றன.

நல்லூர்க் கொடியேற்றம் காலை 10 அளவில் நடைபெறும். தொடர்ந்து 25 நாட்கள் இடம்பெறும் மகோற்சவத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 26ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பரிபாலகர்களான மாப்பாண முதலியார் பரம்பரையில் வந்துதித்த மூன்றாம் இரகுநாத மாப்பாண முதலியார் காலத்தில் ஆலயத்திற்கான முதலாவது தேர் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் இரண்டாம் ஆறுமுக மாப்பாண முதலியார் அழகன் முருகனுக்கான தங்க ஆபரணங்கள் மற்றும் வெள்ளி சிங்காசனம் ஆகியவற்றைச் செய்து அழகன் முருகனை அழகு பார்த்தார். இவரது காலத்தில் சண்முகப் பெருமாள் ஸ்தாபிக்கப்பட்டதுடன் சண்முகரே தேரில் ஏறி பக்தர்களுக்கு அருள் பாலிக்கவும் தொடங்கினார்.

நல்லூரில் பாவனையில் இருந்த தேர் பழுதடைந்த நிலையில் இருந்த காரணத்தினால் அதன் அபாயத்தை உணர்ந்த ஷண்முகத்தாஸ் மாப்பாண முதலியார் புதிய தேர் ஒன்றை 1964ஆம் ஆண்டு திருப்பணி நிறைவேற்றி தானும் வடம் பிடித்து இழுத்து இரதோற்சவத்தை இன்னும் அழகாக்கினார்.



அதுமட்டுமின்றி நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு வரும் மக்கள் இறையன்புடனும், பக்தியுடனும் வருவார்கள். அதுமட்டுமின்றி வரும் மக்கள் நல்லூர் தேர், பூங்காவனம், தீர்த்தம் ஆகியவற்றிற்கு மட்டுமின்றி கொடிஏற்றத்திற்கும் தவறாது ஒவ்வொரு முறையும் வருகை தருவார்கள். சின்னஞ்சிறிய பச்சிளங் குழந்தைகளுக்கு மொட்டை அடித்து கோயிலில் பூசை செய்வார்கள். குழந்தைகள் மகிழ்ச்சியுடன் கோயிலில் தொந்தரவு செய்யாது அமைதியாக விளையாடுவார்கள்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் திருவிழாக்களின் போது வியாபாரத்திற்காக மனிதர்கள் கடைகளை நிர்வகித்திருப்பார்கள். நல்லூர் கொடியேற்றம் மற்றும் திருவிழாக்கள் என்பன தொடங்குவதற்கு முன் ஆற்றங்கரையோரம் காணப்படும் புதிய மணல்களை எடுத்து நல்லூர் ஆலயத்தின் வெளியே கொட்டுவார்கள். இதன்போது ஆலயத்தின் துய்மை பேணப்படுகின்றது. முக்கியமாக மணல் தூய்மையானதாகக் காணப்படுவதால் நாம் அதில் கால் பதிக்கும்போது எம்மிடமுள்ள அழுக்குகள் மறைந்துவிடும். இதனால் ஆலயமும் தூய்மைப்படுகிறது. புராதன காலம் தொடக்கம் காணப்படும் கோயிலாக நல்லூர் கந்தசுவாமி கோயில் காணப்படுகிறது.

**எஸ்.பூர்விகா**

காலைக்கதிர் Kalaikkathir

# மாவட்ட அபிவிருத்தியை இங்குள்ள வளங்களைக்கொண்டு அரச பங்களிப்போடு முன்னெடுக்க மக்கள் ஆணை தருக

## எமில்காந்தன் கோரிக்கை



மாவட்டத்தின் அபிவிருத்தியை இங்குள்ள வளங்களைக் கொண்டு அரசாங்கத்தின் பங்களிப்போடு முன்னெடுக்க மக்கள் ஆணை வழுங்க வேண்டும் என சுயேச்சைக் குழு 7 இன் முதன்மை வேட்பாளர் எமில்காந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி என்பது அந்த மாவட்டத்தில்உள்ளவளங்களைஇனங்கண்டுஅவற்றை பயன்படுத்தி அந்த மாவட்ட மக்களுக்கான தொழில் வாய்ப்புக்களை வழங்கி முன்னெடுக்கப்படுவது ஆகும். அவ்வாறானதொரு அபிவிருத்தி எமது மாவட்டத்தில் இதுவரை காலமும் முன்னெடுக்கப்படவில்லை.

இதனால் எமது பிரதேச இளைஞர், யுவதிகள் பின்தங்கிய நிலையில் இருக்கின்றார்கள். இந்த நிலை மாற்றம் பெற வேண்டும். இதற்கு இந்த தேர்தலை வன்னி மக்கள் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் அரசுடன் பேரம் பேசி அதனை இந்த மண்ணில் நடைமுறைப்படுத்த ஆணையை கோருகின்றோம்.

இதற்கு இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்தக்கூடியவர்கள்மக்கள்பிரதிநிதிகளாக வர வேண்டும். அவர்கள் துடிப்புள்ளவர்களாகவும், சிறந்த திட்டங்களை செயற்படுத்தக் கூடியவர்களாகவும், மொழித் தேர்ச்சி மிக்கவர்களாகவும் இருப்பதே எமது சமூகத்திற்கு நல்லது.

அவ்வாறானவர்களை எமது வன்னி மக்கள் இனங்கண்டு எமது மண்ணின் இளைஞர், யுவதிகளின் மாற்றத்திற்காக வன்னியின் குரலாக எமது கரங்களை பலப்படுத்தி அதற்கான ஆணையை வழங்க வேண்டும். எம் பின்னே திரண்டு வரும் மக்கள் அந்த ஆணையை வழங்குவார்கள் என நாம் நம்புகின்றோம். ஶ்ரீ எனத் தெரிவித்தார். (05 - 100)

# மீனவரின் சடலம் ஹொங்கமவில் மீட்பு

ஹ ொங்கம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கலமெட்டிய பகுதியில் குளத்து நீரில் மிதந்த நிலையில் மீனவரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனபொலிஸார்தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தனது சொந்த படகில் புதன்கிழமை அதிகாலையில் குளத்திற்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளார். இந்நிலையிலேயே மாலை வேளை அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மீனவர்உயிரிழந்தமைக்கான காரணத்தைகண்டறியமேலதிக விசாரணைகளை ஹ ொங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# ஐஸ் போதைப்பொருளுடன் காரைதீவில் இருவர் கைது

(பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் இருவரை புதன்கிழமை மாலை வேளையில் கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே சந்தேக சந்தேகத்திற்கிடமாக நடமாடிய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிண்ணியா பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய நபரொருவரும் சாய்ந்தமருது பிரதேசத்தை சேர்ந்த 27 வயதுடைய நபரொருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவரிடம் இருந்து 510 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும், மற்றவரிடம் இருந்து 770 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சந்தேக நபர்களை காரைதீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காரைதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இந்த கைது நடவடிக்கை கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# புற்றுநோய்யிலிருந்து எம்மைக் காப்போம் கிளிநொச்சியில் விழிப்புணர்வுப் பேரணி








புற்றுநோய்யிலிருந்து பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் புற்றுநோய் விழிப்புணர்வு நடை பேரணி ஒன்று கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றா நோய் சிகிச்சை பிரிவின் ஏற்பாட்டில் பளைப்பகுதியில் நடைபெற்றது.

மேற்படி விழிப்புணர்வு நடை பேரணியானது பளை பிரதேச வைத்தியசாலையிலிருந்து பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் வரை முன்னெடுக்கப்பட்டது.தொடர்ந்துபிரதேசசெயலகத்தில் விழிப்புணர்வு கருத்தரங்கும் நடைபெற்றது. .

விழிப்புணர்வு பேரணி நடை பயணத்தில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்தியர் ஆர்.சுதர்சன், தொற்றாநோய்கள் சம்பந்தமான வைத்தியர் எஸ்.பேனாட்டோ, பளை பிரதேச பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.பிரதீபன் ,பளை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எச்-அனுசா,வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக மற்றும் பிரதேசசபை உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், பொலிஸார், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05 - 113)

# தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் ஆரம்பம்





யாழ். தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக தொடர் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், குறித்த போராட்டமானது புதன்கிழமை மாலை மீண்டும் ஆரம்பமாகியது.

சட்டவிரோத முறையில் அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த்தேசியமக்கள்முன்னணியினர், மக்களுடன் இணைந்து தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்த போராட்டம், ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.10.2024இல் வெளியிடப்பெற்றது